உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமபுர ஆதீனத் திங்கள் வெளியீடு

மலர் 18] விளம்பி ஆண்டு பங்குனித்திங்கள் 10—4—59 [இதழ் 5

தருமபுர ஆதீனம்
வேளூர்
ஸ்ரீ வைத்தியநாதசுவாமி
தேவஸ்தானத்தில்
ஸ்ரீ வைத்தியநாதப்
பெருமானுக்குப்
புதிதாகச்
செய்யப்பெற்ற
தங்க நாகாபரணம்

ஆசிரியர்:- வித்துவான். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்

துணை ஆசிரியர்:- வித்துவான். முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்

குருபாதம்

“ ஞானசம்பந்தம் ”

உட்பொருள்

			பக்கம்
1.	சிவ ஞான போதம்	...	293
2.	சைவ சித்தாந்தம்	...	297
3.	முப்பொருள் விளக்கம்	...	305
4.	காஞ்சிக் கரைகண்டநாதர் பதிகம்	...	309
5.	பழந்தமிழ் நூல்களில் உயிர் வகைகள்	...	311
6.	சிவாகமம் ...	...	315
7.	பேறற்கு அரிய குருவருள் ...	...	319
8.	*உருப சோருப அகவல் ...	...	321
9.	பிள்ளைத்தமிழ்ப் பெருமை ...	...	326
10.	அன்பின் வேற்றி ...	...	331
11.	கனம். திரு. M. பக்தவத்சலம் B.A., B.L., அவர்கள்		335
12.	திரு. சுனீத்குமார் சாட்டர்ஜி அவர்கள்	...	336
13.	சவுந்தரியந்தாதி ...	...	337
14.	திரு. T. புருஷோத்தமன் M.L.C. அவர்கள்	...	341
15.	கோயில் ...	...	342
16.	செய்திகள் ...	...	347
17.	எதிர்காலம் ...	...	353
18.	மதிப்புரை ...		308, 314, 325
19.	கடிதம் ...		339, 340

புத்தாண்டு வாழ்த்து

சோசி

தமிழ்ப் புத்தாண்டு தமிழகந் தன்னில்
தமிழென மலர்ந்தது ; தன்னே ரில்லாச்
செந்தமிழ்க் கலைகள் செழிக்கும் செழிப்பென
வந்தது வேனில் வான்தரு குழவி ;
பருவம் படர்ந்தது ; ‘ பாரிடை யினிமேல்
கருவம் போட்டி கசடுக ளனைத்தும்
ஓடிடும் ; புதிய அமைதி ஒளிர்ந்திடும் ;
கூடிடும் இன்பம் ; குறிக்கோள் தன்னை
உணர்ந்து தெளிகுவான் உலகப் பண்’என
இணர்கள் எங்கும் இயம்புதல் கேளீர் !
திருவும் கல்வியும் தெளிவும் பெருகிட
வருக புத்தாண்டென வாழ்த்துவம் யாமே.

தருமையாதீனம் திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானம் மேலராமன் சேத்தி கிராமத்தில்
(19—2—59) கற்பகவிருக்ஷம் (தென்னைமரம்) நடுவிழா.



(1) கற்பக விருக்ஷ நடுவிழாவை சென்னை மாநில அறநிலய அமைச்சர் கனம், திரு. M. பக்தவத்சலம் B.A., B.L., அவர்கள் தொடங்கிவைத்தல் (2) 1008 தென்னம்பிள்ளைகள் வைக்கப் பெற்றுள்ள காட்சி. (3) அறநிலையு டிப்டி கமிஷனர் திரு. சர்க்கரை சேர்வை அவர்கள் கற்பக விருக்ஷம் நடுதல்.

தருமையாதீனம் திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானம் மேலராமன் சேத்தி கிராமத்தில்
(19—2—59) சாகுபடியாளர் கூட்டுறவு சங்கத் தோடக்க விழா.

(1) சென்னை மாநில அறநிலய அமைச்சர் கனம் திரு M, பக்தவத்சலம் B.A., B.L., அவர்களை 1008 தென்னைமரங்கள் நடப்பெறும் இடத்தில் வரவேற்றல். (2) கூட்டுறவு சங்கத்தைத் தோடங்கி வைத்தல்.

உ
குருபாதம்
வாழ்க உலகெலாம்!

ஞானசம்பந்தம்

[தருமபுர ஆதீனத் திங்கள் வெளியீடு]

மலர் 18 விளம்பி - பங்குனி 10—4—59 இதழ் 5

உ
திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

சிவ ஞான போதம்

கட்டுரை 3

(மலர் 18. இதழ் 4 பக்கம் 212 இன் தொடர்ச்சி)

முதலதிகரணத்துப்பொருளை உணர்த்தும் திருவெண்பா:-

2 'பூதாதி 4 யீறும் முதலும் துணையாகப்
1 பேதாய் 3 திதி 5 யாகும் பெற்றிமையின்—10 ஓதாரோ
6 ஒன்றொன்றிற் றொன்றி 7 உளதாய் 8 இறக்கண்டும்
9 அன்றென்றும் உண்டென்ன ஆய்ந்து.'

(சிவஞானபோத வெண்பா 1.)

இதன் போருள் :-

1. பேதாய் - (பிரபஞ்சம் நித்தியம் -) உலகு அழியாதது என்னும் பேதைமையுடையவனே;

2. பூதாதி - நீ நித்தியம் என்ற நான்கு பூதம் ஆதியாகத் தோன்றிய பிரபஞ்சம் முழுவதும்;

3. திதி. 4. ஈறும் முதலும் துணை ஆக 5. ஆகும் பேற்றிமையின் - நிலை(த்தல் நிகழுங்கால்) அழிவும தோற்றமும் துணைக்காரணமாகக் கோண்டே நிகழும் தன்மையால்;

6. ஒன்று ஒன்றின் தோன்றி - ஒரு வடிவு ஒரு வடிவிலே தோன்றி (தோற்றம்).

7. உளது ஆய் - உள்ளதாகி (ஸ்திதியாகி, நின்று) (நிலை)

8. இறக் கண்டும் - அழியக் கண்ணுற் கண்டு வைத்தும் (அழிவு).

9. * அன்று - அன்ன தன்மை (மூவினைமை);என்றும் - எக்காலத்தும்; உண்டு என்ன - உளது என்று; ஆய்ந்து - ஆராய்ந்து.

10. ஓதாரோ - சோல்லாரோ? (உனக்குள்ள பேதைமை இல்லாதார்.)

இதனுரையில், முன்னோர் கருத்து வேறுபாட்டை உணர்த்தும் பகுதிகளாவன :-

1. 'பேதாய் - உலகாயதனுகிய அறிவில்லாதவனே.' (சிவஞானபோதம் பழையவுரை) பக்கம் 8.

2. பூதாதி - 'நீ நித்தியம் என்ற நான்கு பூதம் ஆதிய பிரபஞ்சம் முழுவதும்' (ஷை). 'பூதம் முதற் காரணமாக வுடைய பிரபஞ்சத்திற்கு' (சிவஞானமாமுனிவர்). 'பூதாதி - அன்மோழித்தோகை. பூதத்துக்குமேல் உளவாய தத்து

---

* அன்னது என்பதும் அன்று என்பதும் ஒரு போருளன. 'அற்று' என்னும் சோல்லின் ஆராய்ச்சியுடையார்க்கு இது புலனாகும்.

வங்கள் உலகாயதருக்கு உடம்பாடன்மையின், பூதமுதலாய தத்துவங்கள் என உரைத்தல் ஈண்டைக்கு ஏலாமை அறிக.' (முனிவ ருரை).

3. 'பேற்றிமை - 'ஏது முறைமை' (பழையவுரை). 'ஒன்றேன்றின் பேற்றிமையின் தோன்றி' என்று இயைத்து, சாதி என்று போருள்கோண்டு, 'ஈண்டுப் பேற்றிமை என்றது சாதியை' என்றது ஷை முனிவ ருரை.

4. 'ஒன்றேன்றின் தோன்றி' முதலியவற்றிற்கு 'ஒரு வடிவிலேயிருந்து ஒரு வடிவு தோன்றிநின்று அழிகிற காட்சிப் பிரமாணத்தினுலேயும் நீநித்தியம் என்ற பூதாதிப் பிரபஞ்சம் ஆகிய காரியம் நித்தியம் அன்று என்றும், ஒவ் வோரு காலங்களிலே சிருட்டிப்பட்டும் திதிப்பட்டும் சங்காரப் பட்டும் வருவதுண்டு என்றும் ஆராய்ந்து உணர்ந்த அறி வுடையோர்கள் சோல்லார்களோ? சோல்லுவர் என்றவாறு' என வேறுரையாகக் கூறும் அப் பழையவுரை.

'ஒன்று ஒன்றின் - ஒவ்வோருகால விசேடத்தின்; பேற் றிமையின் - சாதிபற்றி; தோன்றி - (ஒருங்கே) தோன்றி; உளதாய் - (ஒருங்கே) நின்று; இறக் கண்டும் - ஒருங்கே அழிவதனைக் கண்டு வைத்தும்; என்றும் - என்ருயினும்; அன்று - அதற்குரிய காலம்; உண்டு என்ன - (வரும் என்று உலகத்திற்கும் அங்ஙனம் ஆதல்) உண்டு என்று; ஆய்ந்து ஓதாரோ - ஆராய்ந்துசோல்லார்களோ? உன்னைப் போலும் மடமையில்லாதோர்.' (இது சிவஞானமாமுனிவர் உரைப்படி எழுதப்பட்ட சோற்போருள்). "ஒன்றேன்றின் என்பது 'ஒன்றேன்ருப் பார்த்துணர்வதுள்ளமே' என்ருற்போல அடுக்குமோழி. அது காலவிசேடமாதல் என்றும் அன்று எனப் பின்வருதலாற் பேற்ரும்.' 'ஒருங்கே என்பது சோல் லேச்சம்' 'ஒன்றேன்றிற் ரேன்றியுளதாயிறுதலாவது' 'பயில்வித்தேல்லாம் காரிடமதனிற் காட்டும் அங்குரம் கழியும் வேனில்.' என்பதனுன் அறிக." (முனிவர் உரை).

ஒன்று ஒன்றிற் ரேன்றியுளதாயிறக் கண்டும் :- 'ஒன்றின் ஒன்று தோன்றிநின்று அழிதலாலே' (சித்தியார் சுபக்கம் 28. அருணந்திதேவ நாயனுர் உரை). இதற்குப்

பழையவுரை, சிவஞானசித்தியாரின் பொருளையே இசைந் துரைத்ததாகும். சிவஞானமாமுனிவர் உரை மட்டும் அருணந்திதேவ நாயனுர் உரையோடு ஒவ்வாமல் வேறுபட் டுளது. சித்தியாருள்ளும், அதனுரைக்கண், (ஒன்று -) இரு கூற்றுப் பிரபஞ்சத்துள் ஒன்ருகியவுலகமும்; (ஒன்றின் -) ஏனைக் காயம் போல; (தோன்றிநின்றழிதல் -) தோன்றிநின் றழிதலை (உணர்த்தும்) எனக் கொண்டுரைத்தருளினுர் முனிவர்பிரானுர். அங்கே, 'ஒன்றின் ஒன்று' என்றிருப் பதை, ஒன்று ஒன்றின் என்று மாற்றி, முதலாவது 'ஒன்று' உலகத்தையும் இரண்டாவது 'ஒன்று' உடலத்தையும் உணர்த்தினவாகக் கொண்டமை உணர்க. அன்றியும், தாம் கொண்ட பொருளை நாட்டி அப்பழையவுரை முதலியவற்றைப் போலி என வீட்டியதும் அறிக. நாட்டி வீட்டியதையும் காட்டி அமைகின்ருேம்.

'ஒன்றிஞென்று தோன்றிநின்று அழிதலால் என்பதற்கு வானம் முதலிய ஐந்தும் முறையே ஒன்றின் ஒன்று தோன்றி நின்று அழியும் என்னும் சுருதி உனக்குப் பிரமாணம் ஆதலால் என்று உரைப்பாரும் உளர்; வேதத்துள் விதிவாக் கியம் ஒழித்து ஒழிந்தன எல்லாம் புனைந்துரை வகையான் அன்றிப் பிரமாணம் ஆகா எனக் கொண்ட மீமாஞ்சக மதத் தார்க்கு அவ்வுபநிடதச் சுருதி பிரமாணம் அன்று என்பது அவர் அறிந்திலர். அல்லதூஉம் ஈண்டுக் கூறுவன எல்லாம் * பொருந்துமாறுபற்றி அன்றி ஆகமவளவைபற்றி அன்று ஆகலானும் அவ்வுரை போலியாதல் அறிக.'

பாண்டிப்பெருமாள்விருத்தியும் 'ஒரு பொருளிலே ஒரு பொருள் தோன்றி நின்று அழிவது' என்றுரைத்தது. அதில் 'என்றும்' 'என்ன' என்பவற்றிற்கு 'என்றும்' என்றே பொருள் உளது. அன்றேன்றும் உண்டேன்றும் ஆய்ந்து என்று பாடினும் வெண்பாவியல் கெடாது அதனுல், அப் பொருள் பொருந்துமோ என்று ஆய்ந்து ஓதுக.

* 'பொருந்துமாருவது இது கூடும் இது கூடாது எனத் தன்கண்ணே தோன்றுவது. இதனை வடநூலார்யுத்தியேன்ப.' (திருக்குறள். 242. பரிமேலழகர் அகலவுரை).

சைவ சித்தாந்தம்

வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்
தருமபுர ஆதீனம், சென்னை.

பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போல்பசு பாசம் அநாதி
பதியினைச் சென்றணு காப்பசு பாசம்
பதியணு கிற்பசு பாசம்நில் லாவே.

—திருமூலர் திருமந்திரம்

ஆசியாவின் சிறப்பு :-

உலகம் ஐந்து கண்டங்களாக அமைந்து விளங்குகின்றது. அத்தனைக் கண்டங்களிலும் வாழ்ந்து வரும் மக்களுள் ஒரு சிலரைத் தவிர அனைவரும் கடவுள் உணர்வும், நம்பிக்கையும் உடையவர்களாகவே திகழ்கின்றனர். இத்தகைய தெய்வ உணர்வை மக்கள் தகுதிக்கேற்பப் பல சமயங்களின் வாயிலாக அவ்வப்போதும் உபதேசித்த ஞானியர் பலராவர். அவ்வனை வரும் தோன்றும் தனிச் சிறப்பு ஆசிய கண்டத்திற்கே உரித் தானது. ஆசிய கண்டத்தில் தோன்றிய பெரியவர்கள்தான் உலகத்தில் நிலவிவரும் ஒவ்வோரு சமயங்களுடையவும் தந்தை யர்களாவார்கள்.

இந்து மதம் :-

ஆசியாவினுள்ளும் இந்தியா இத்துறையில் இன்றுவரை தலைசிறந்து விளங்குகின்றது. இந்தியாவில் பல சமயங்கள் தோன்றியுள்ளன. இருப்பினும், வேதம் நான்கினையும் தமக்கு அடிப்படையாகக் கொண்டு உயிர்கட்கு நல்வழி காட்டும் சமயங் களையே இந்து மதம் என்று தொகுத்து அழைத்துவருகின்றனர் நல்லோர். சிறப்பாகச்சொன்னால் சைவம், வைணவம், சாக்தம், காணபத்தியம், கௌமாரம், சௌரம் என்ற இவற்றைக் கூற லாம். இவற்றை அறுவகைச் சமயம் என்றும் அறிவிப்பர். சைவம் சிவபெருமானையும், வைணவம் விஷ்ணுவையும், சாக்தம் அம்பிகையையும், காணபத்தியம் விநாயகரையும், கௌமாரம்

குமாரக்கடவுளையும், சௌரம் சூரியனையும் தலைமையாகக் கொண்டு விளங்குவனவாம்.

வேத உபநிடத முடிபு :-

அறுவகைச்சமயத்தோர்க்கும் அவ்வவர்பொருளாய், வேறும் குறியது உடைத்தாய், வேதாகமங்களின் குறியிறந்து, அறிவினில் அருளால் மன்னி அம்மையோடப்பனுகிச், செறிவொழியாது நிற்கும் சிவனடிப் பெருமை கூறி, அனைத்துயிர்களையும் வாழ்வாங்கு வாழவைப்பதே சைவ சித்தாந்தமாகும். அந்தத்தைச் செய்யும் சங்காரக் கடவுளாகிய சிவபரம்பொருளே உலகத்திற்கு முதல்வனுவான். அவனே முழுமுதற் கடவுள். மற்றத் தெய்வங்கள் அம் முதல்வனது அங்கங்களாக அமையும். அம் முதல்வனையே ஏகம் என்ற சொல்லாலும், சத் என்ற சொல்லாலும், இருக்வேதம் குறிக்கின்றது. ஏகம் என்று குறிப்பிட்ட சொல்லுக்குப் பொருளாக இருப்பவர் உருத்திரரே என்பதைச் சுவேதாசுவதரம் என்ற உபநிடதம் தெளியக் கூறுகின்றது. இக் கருத்தை "ஒருவனுய் உலகேத்த நின்ற நாளோ" என்ற அப்பர் சுவாமிகள் திருவாக்கும், "ஒருவன் என்னும் ஒருவன் காண்க" என்ற மாணிக்கவாசகர் மணிமொழியும் வலியுறுத்துவது காணலாம். மேலும் வைணவப் பெரியாராகிய நம்மாழ்வாரும் கண்ணனைப் போற்றிப் பரவும் "ஒளி மணிவண்ணன் என்கோ—" என்ற திருப்பாடலில் "—ஒருவன் என்றேத்த நின்ற நளிர் மதிச்சடையன் என்கோ—" என்று சிவபெருமானை ஒருவன் என்று குறிப்பிட்டுள்ளதுங்காண்க. எல்லோராலும் வணங்கத் தக்கவனும் அவனே என்பதை "மற்றெல்லாவற்றையும் விடுத்துத் தியானிக்கத்தக்கவர் சிவபெருமானே" என்று அதர்வசிகை உபநிடதம் அறிவிக்கின்றது. இதுகாறும் கூறியவற்ருல் வேத உபநிடதங்களாலும், தமிழ்மறைகளாலும் ஒருவன் என்று அழைக்கப்படுபவன் சிவபரம்பொருளே என்பது தெளிந்தாம். அப்பெருமானைப் பரம்பொருளாகக்கொண்டு விளங்குவதே சைவ சித்தாந்தச் செந்நெறியாகும். இச்செந்நெறியின் அடிப்படைக் கொள்கை பதி (கடவுள்), பசு (உயிர்), பாசம் (உலகம்) என்ற மூன்று பொருள்களும் அனுதி தொட்டு என்றும் உள்ள உண்மைப் பொருள்கள் என்பதாம். இக்கொள்கை கொள்கையளவோடு நில்லாமல் வாழ்வியல் முறையிலும் ஒத்து இயங்கும் சிறப்புடையது. மேலும் உலகியலுக்கும், அனுபவத்திற்கும்,

விஞ்ஞானத்திற்கும் ஒத்துள்ளது என்பதை இத்துறையில் ஓரளவு தலைப்பட்டவர்கள் நன்கு உணர்வார்கள். இதன் பெருமையை உணர்ந்த மேலைநாட்டுப் பாதிரியாரான ஜி. யு. போப்பையர் கீழ் வருமாறு குறிப்பிட்டுள்ளமை ஈண்டு கவனிக்கத்தக்கதாகும்.

ஜி. யு. போப்பின் கருத்து :-

"சைவ சித்தாந்தம் என்னும் தத்துவக் கோள்கையானது மிக விரிந்ததும், பெருஞ் சேல்வாக்குடையதும், ஐயத்திற்கு இடனின்றி உண்மையிலேயே பெருமதிப்பிற்கு உரியதும், இந்திய நாட்டிலுள்ள சமயக் கோள்கைகளுளேல்லாம் தலைசிறந்தது மாகும். தேன்னிந்திய மக்களின் மிகச் சிறந்த பேரறிவின் பெருவிளைவே சைவ சித்தாந்தமாகும். இறை, உயிர், மக்கள் தன்மை, உலகியற்கை, அறியாமை, துன்பம், காணப்படாத மறுமை நிலைகள் என்பனவற்றைக் குறித்த சிக்கலான பொருள் களைத் தேளிந்துகோள்ளும் இத்தகைய சிறந்த முயற்சி பற்றி இதுகாறும் ஆங்கிலத்தில் முற்றிலும் எடுத்து விளக்கப்படவே யில்லை."

W. கௌடியின் கருத்து :-

மேலும் இதன் சிறப்பை W. கௌடி என்பவர் கூறுவன வற்றையும் காண்க. "பிற எல்லா ஆராய்ச்சி வகைகளையும், கோள்கை அல்லது வழிபாட்டு முறைகளையும்விட மேலான தாகச் சைவ சித்தாந்தம் சில சிறப்பியற் பண்புகளைத் தன்ன கத்தேகோண்டு ஒளிர்கின்றது. மிகவும் பழமை வாய்ந்ததாய் அப் பழமையினாலாய பெருமைகளைப் பேற்று விளங்குகின்றது. சமய உலகில் தேன்னிந்தியாவில் உள்ள மிகப் பெரும்பான்மை யான சிறந்த கருத்துக்களுக்கேல்லாம் சைவ சமயமே நேரிதின் உரிமைத் தோடர்புடையதாகும். தமிழ் மக்களின் சமயமாகிய இதனை நோக்க அடுத்துள்ள ஏனைய பிற எல்லாம் ஒப்பியல் முறையில் அயலவர்க்கு உரியனவும், அண்மையில் தோன்றி யனவுமேயாகும். சமய ஆராய்ச்சித்துறையிலும் கோள்கை, வாழ்க்கை என்பனவற்றின் வேளிப்பாட்டு முறையிலும் மிகமிகச் சிறந்ததோன்றாகத் தேன்னிந்தியா பேற்றிருப்பது சைவ சித்தாந் தமேயாகும்" இவ்வாறு கூறும் இவ்விரு அயல்நாட்டு அறிஞர் களின் கருத்துரைகோண்டே சைவ சித்தாந்தத்தின் மேன்மையை ஓரளவு தேளியலாம்.

அடிப்படைக் கொள்கை :-

இனி, சைவ சித்தாந்தத்தின் கோள்கைச் சிறப்பினைக் காண்போம். பதி (கடவுள்), பசு (உயிர்), பாசம் (உலகம்) என்ற முப்போருள்களும் என்றும் உள்ள உண்மைப் போருள்கள். இவை என்றும் உள்ளனவேனும் தகுதியால் வேவ்வேறு இயல்பு உடையனவேயாகும். இம் முப்போருள்களும் ஒன்றால் ஒன்று தோற்றுவிக்கப்படாமல் அநாதிகாலந்தோட்டே இருப்பனவை. அநாதி என்பதன் போருள் ஆதி இல்லாதது. எனவே, முதலும் முடிவும்—தோற்றமும், இறுதியும் இல்லாதது என்பதாகும்.

பதி (கடவுள்) :-

அவற்றுள் இறைவன் ஒளிமயமாகிய அறிவே உருவானவன். எல்லாம் அறிபவன். எல்லாம் வல்லவன். சுதந்தரஞானம் உடையவன். எங்கும் நிறைந்தவன். நடுநிலைமை உடையவன். குறைவிலா நிறைவினன். பிறப்பு இறப்பு இல்லாதவன். பேரின்ப மயமாக உள்ளவன். இயல்பாகவே பாசத்தின் நீங்கியவன். இயல்பாகவே எல்லா நலங்களும் உடையவன். எனவே அறிவித்தால் அறியும் தகுதியுடைய உயிர்களை ஈடேற்றுவதற்காக உலகத்தைப் படைத்தும், காத்தும், அழித்தும், மறைத்தும், அருளியும் ஐந்தோழில்களை மிகவும் எளிதாகப் புரிபவன். அத்தகைய இறைவன் ஒருவனே. ஆயினும், தானும் தன் சக்தியும் என இருதிறப்பட்டு இயைந்துநிற்பவன். எங்ஙனமெனில் சூரியன் ஒன்றே எனினும், அது பிறபோருளைக் காட்டும் நிலையில் ஒளி எனவும், தன்னைக் காட்டி நிற்கும் நிலையில் சூரியன் எனவும் இருதிறப்பட்டு இயைந்து நிற்றல் போல என்க. சூரியனும் அதன் கிரணமும் போலவும், மலரும் அதன் மணமும் போலவும், நேருப்பும் அதன் வேப்பமும் போலவும், பாலும் அதன் சுவையும் போலவும் தானும் தன் சக்தியும் பிரிப்பின்றி இயைந்து ஒருவனுய் உலகேத்த உயர்ந்து நிற்பவன்.

பசு (உயிர்) :-

உயிர்கள், அளவில்லாதனவாய் உள்ளவை, எந்தப் போருளைச் சார்ந்தாலும் அந்தப் போருளினைப் பிரதிபலித்துக் காட்டும் படிகம்போன்ற தன்மை வாய்ந்தவை. எனவே தேய்விகச் சக்தியைப் பேறத் தக்கவை, இறைவனதருளால்

கிடைக்கும் பேரின்பத்தை நுகரக் கூடியவை. ஆனால் அநாதியே பாசத்தால் கட்டுண்டு துன்பத்தில் மூழ்கியுள்ளன. அறிவில் பொருளும் அல்லாமல், தாமே அறியும் பொருளும் அல்லாமல் கடவுள் அறிவித்தால் அறியும் சிற்றறிவுடையனவாய் உள்ளன. தாமே அறியும் தகுதியில்லாதன, சுதந்தர ஞானம் இல்லாதன, கண்களைப் போன்றன. என்னை ? கண்களுக்கு ஒளி உண்டு : இருப்பினும் சூரிய ஒளியோ அல்லது விளக்கொளியோ காட்டினால் தான் கண்கள் பொருளைக் காண முடியும், இல்லையானால் சிறு ஒளி படைத்த கண்கள் பொருளைக் காணமுடியாது, அதுபோல் கண்களை ஒத்த தன்மை வாய்ந்த உயிர்களும் இறை ஒளி உணர்த்தினாலன்றி ஒன்றையும் உணர மாட்டா என்க.

பாசம் (உலகம்) :-

பாசம் என்பது தளை அல்லது கட்டு எனப்படும். அப்பாசம் ஆணவம், மாயை, கன்மம் என மூன்று வகைப்படும். இவற்றை மும்மலம் என்றும் கூறுவர்.

ஆணவம் :-

ஆணவமானது நெல்லிற்கு உமியும், செம்பினில் களிம்பும் போல், உயிரை அநாதியே பற்றி நின்று, அவ்வுயிருக்கு அறியாமையையும், செருக்கையும் ஊட்டுவது. இஃது அநாதி தொட்டே உயிரைப் பற்றி நிற்றலால் மூலமலம் என்றும், சகசமலம் என்றும் பேசப்பெறும். உயிரின் அறிவை விளங்கவொட்டாமல் தடை செய்யும் இயல்பினது. தான் ஒன்றேயாய் அனேக சக்திகளை உடையதாயிருப்பது உயிர்களுக்குத் தன்னையும் காட்டாமல் பிறபொருளையும் காட்டாமல் மறைத்து நிற்பது. இதன் மறைப்பு ஆற்றலை.

" ஒரு பொருளுங் காட்டா(து) இருளுருவங் காட்டும்
இரு பொருளுங் காட்டா(து) இது "

என்னும் திருவருட் பயன் செய்யுளால் நன்குணரலாம். மோகம், மதம், அராகம், கவலை, தாபம், வாட்டம், விசித்திரம், என்னும் ஏழும் இதன் செயல்களாகும் என்பர் சிவஞான முனிவர். விகற்பம், கற்பகம், குரோதம், மோகம், கோலை,

அஞர், மதம், நகை என்னும் எட்டும் ஆணவத்தின் குணக் குறி யென்பர் அருணந்திசிவம்.

மாயை :-

மா என்பது ஒடுங்குதல், யா என்பது வருதல்; எனவே எல்லாப் பொருள்களும் ஒடுங்குதற்கும், தோன்றுதற்கும் காரணமாய் நிற்பது மாயையாகும். இம்மாயை இறைவனது அருளால் உலகத்தோற்றத்திற்கு முதற்காரணமாய் நின்று உயிரின் இயக்கமற்ற தன்மையையும், செயலற்ற தன்மை யையும் நீக்கி அதை உயர்த்தவல்லது. மாயையின் காரியம் தனு (உடம்பு), கரணம், புவனம், போகம் என்பனவாம், மாயையானது சுத்தமாயை, அசுத்த மாயை, என இருவகைப் பட்டு தத்துவங்களின் தோற்ற ஒடுக்கத்திற்குக் காரணமாய் நிற்பது. ஆணவ இருளில் அழுந்தி அறிவிழந்து கிடக்கும் உயிர்கட்கு உடலும், கருவிகளும், பிறவுமாய் அமைந்து ஒரு சிறிது அறிவாகிய ஒளியைத் தோற்றுவித்து உதவி செய்வது இம்மாயையே. இக்கருத்தை "மாயாதனு விளக்கா" என்று அருளிச்செய்தனர் மெய்கண்ட முதல்வர்.

தத்துவங்கள் :-

தத்துவம் என்பது கருவியாகும். உயிர்கள் இன்பத் துன்பங்களை உடல் முதலிய கருவிகளைக் கொண்டே அனுப விக்கின்றன. அவ்வாறு உயிர்களின் அனுபவத்திற்குத்துணை செய்யும் கருவிகளே தத்துவங்களாம். பாரதநாட்டுச் சமயங்கள் பெரும்பாலும் 24 தத்துவங்களோடு அமைந்துள்ளன. இவற்றை ஆன்ம தத்துவம் என்று சைவ சித்தாந்தம் கூறும். இவற் றுக்குமேல் வித்தியாதத்துவம் ஏழும், சிவ தத்துவம் ஐந்தும் கொண்டு 36 தத்துவங்களுடன் விளங்குவது சைவசித்தாந்தம். தத்துவங்களைச் சரியாகப் புரிந்துகொண்டால்தான் சாத்திர அறிவு விளக்கம் பெறமுடியும்.

ஆன்ம தத்துவம் :-

மண், நீர், தீ, காற்று, வானவெளி என்ற ஐம்பூதங்கள்; மெய், வாய், கண் மூக்கு, செவி என்ற ஐம் பொறிகள்

(ஞானேந்திரியங்கள்) ; சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐம்புலன்கள் (தன்மாத்திரை) ; வாக்கு, கால், கை, எருவாய், கருவாய் என்ற ஐந்து கர்மேந்திரியங்கள் ; மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்ற நான்கு அந்தக்கரணங்கள் ஆகிய இவ்விருபத்துநான்கும் மனித உடலுள் செயற்படும் ஆன்மதத்துவங்களாம். இத்தத்துவத் தொகுப்பு போக்கிய காண்டம் எனப்பெறும்.

வித்தியாதத்துவம் :-

காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை என்பன வித்தியா தத்துவங்களாம். இத்தத்துவத் தொகுதி போசயித்திரு காண்டம் எனப்பெறும்.

சிவதத்துவம் :-

நாதம் (சிவம்), விந்து (சக்தி), சாதாக்கியம், ஈசுவரம், சுத்தவித்தை என்பன சிவதத்துவங்களாம். இவற்றைச் சுத்த தத்துவங்கள் எனவும் கூறுவர். இவை பிரேரககாண்டம் எனப்பெறும்.

கன்மம் :-

ஆணவ மலத் தொடர்பால் உயிர்கள் செய்யும் வினை களின் தொகுதியே கர்மமாகும். இது நல்வினை தீவினை வடி வாய், இன்பத்துன்பங்கட்கும், பிறப்பு, இறப்புகட்கும் காரண மாய் இருப்பது. இக்கன்மம் சஞ்சிதம், பிராரத்தம், ஆகாமியம் என மூவகைப்படும். உயிர்கள் முற்பிறவிகளில் நல்வினை தீவினைவாயிலாகத் தேடிவைத்த கர்மம் சஞ்சிதம் என்றும், அதனை இப்பிறவியில் அனுபவிப்பது பிராரத்தம் என்றும் இப்பிறப்பில் அனுபவிக்கும் போதே உண்டாக்கிக்கொள்வது ஆகாமியம் என்றும் சொல்லப்படும்.

முடிவுரை :-

இதுகாறும் கூறியவற்றால் ஆசிய கண்டத்தின் பெருமை யும், இந்து மதம் என்ற சொல்லின் பொருளும், சைவ சித்தாந்தத்தின் தனிச் சிறப்பும் ஓரளவு புலனாகும். இச்சைவ

சித்தாந்தம் அறுதியிட்டு உறுதிபெறத் தெளிவு படுத்திக்கூறும் முப்பொருள் உண்மையை உள்ளவாறு உணர்த்துவன திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் முதலிய 27 ஆசிரியர்கள் அருளிச்செய்த பன்னிருதிருமுறைகளும் மெய்கண்டதேவர், அருணந்தி சிவம், உமாபதிசிவம் முதலிய ஆறு ஆசிரியர்கள் அருளிச்செய்த பதினான்கு சித்தாந்த சாத்திரங்களுமாம். மக்களாகப் பிறந்தோர் பன்னிரு திருமுறைகளையும், பதினான்கு சித்தாந்த சாத்திரங்களையும் ஓதி உள்ளவாறு உணர்ந்தும், பிறர்க்கு உரைத்தும், சித்தாந்தச் செந்நெறி நின்றும் சிறப்புறுவார்களாக.

என்னை அறிவென்றான் என்னறிவில் ஆனந்தந்
தன்னைச் சிவமென்றான் சந்ததமும்—என்னை உன்னைப்
பாரா மறைத்ததுவே பாசமென்றான் இம்மூன்றும்
ஆராய்ந் தவர்முத்த ராம்.

— ஸ்ரீ குருஞானசம்பந்தர்.

இராகம் - ஷண்முகப்ரியா தாளம் - ஆதீ

பல்லவி

சித்த மிரங்காயோ சிதம்பரத் திலாடும்
பித்தனே பெம்மானே என்பாலுன் (சித்தம்)

அநுபல்லவி

முத்தர் தொழுதிடும் முக்கண் அப்பனே
எத்தர் வாழ்வில் மயங்கிடு மெனைக்காக்க (சித்தம்)

சரணம்

துடித்தவர் தமக்குத் துன்பம்தீர்த் துன்கழல்
பிடித்தவர் பிழையைப் பொறுக்குமென் நாயகா
படித்தவர் எனப்பெயர் பூண்டவர் நடுவில்
நடித்திடும் சித்தனின் நடலையெலாம் தீர்க்க. (சித்தம்)

T. B. SIDDALINGAIAH,
Tamil News Unit, All India Radio, New Delhi.

முப்பொருள் விளக்கம்

தருமபுர ஆதீனத் தமிழ்ப் புலவர், சித்தாந்தக் கலைமணி,
வித்துவான். திரு. சி. அருணைவடிவேலு முதலியார்

(மலர் 18, இதழ் 2, பக்கம் 98 இன் தொடர்ச்சி)

இறையது பொதுவியல்பு

இறை, மெய்ப்பொருளாயும் அறிவுடைப்பொருளாயும் நின்று, எண்குணங்களையுடைத்தாதலின், அக்குணங்கள்யாவும் அதனது ஆற்றலானே ஆவனவாம். என்னையெனின், யாதொரு பொருளாயினும், அதன்கட்காணப்படும் குணங்களெல்லாம் அதனது ஆற்றலானே ஆவனவாகலின் என்க.

அவ்வாற்றான், இறைக்கு, அதனது குணங்கள் எல்லாவற்றிற்கும் முதலாகிய ஆற்றல் உண்மை பெறப்படவே, 'இறை, பொருளால் ஒன்றாய்த், தானும் தனது ஆற்றலும் என இரு தன்மைப்பட்டு நிற்கும்' என்பது பெறப்படும். இறை. 'சிவம்' எனவும், அதனது ஆற்றல், 'சத்தி' எனவும் வழங்கப்படும் என்க.

ஒன்றே ஆய முதற்பொருள், இங்ஙனம், 'சிவமும் அதனது சத்தியும்' என இருதன்மைப்பட்டு நிற்றல் எதுபோலும் எனின், ஒன்றே ஆய ஞாயிறு, 'ஞாயிறும் அதன் ஒளியும்' என இரு தன்மைப்பட்டு நிற்றல் போலும் என்க.

ஞாயிறு இருதன்மைப்பட்டு நிற்றல், 'ஞாயிறு' என்புழி 'வேயில்' என்றல் ஏலாமையும், 'வேயில்' என்புழி 'ஞாயிறு' என்றல் ஏலாமையும் பற்றி உணர்க.

இனி, ஞாயிற்றிற்குத், தன்னை விளக்குதல், பிற பொருள்களை விளக்குதல் என இருதன்மைகள் உள. அவற்றுள், தன்னை விளக்கும் நிலைபற்றிக் கூறப்படுமிடத்தே, 'ஞாயிறு' எனவும், பிறபொருள்களை விளக்கும் நிலைபற்றிக் கூறப்படுமிடத்தே, 'வேயில்' எனவும் வழங்கப்படும். அங்ஙனமே, இறைக்குப், பிறபொருளை நோக்காது தன்னியல்பில் நிற்றல்,

பிறபொருளை நோக்கி நிற்றல் என இருதன்மைகள் உள. அவற்றுள் பிறபொருளை நோக்காது தன்னியல்பில் நிற்கும் நிலை பற்றிக் கூறப்படுமிடத்துச் 'சிவம்' எனவும், பிறபொருளை நோக்கி நிற்கும் நிலைபற்றிக் கூறப்படுமிடத்துச் 'சத்தி' என வும் வழங்கப்படும் என்க.

இங்ஙனமாகவே, சிவமும் சத்தியும், ஞாயிறும் அதன் ஒளி யும் போலவும், தீயும் அதன் சூடும் போலவும், மரமும் அதன் காழ்ப்பும் (வயிரமும்) போலவும், முதலும் அதனது பேற்றியும் ஆவனவல்லது, உயிரும் உடலும் போல, இரண்டும் இரண்டு தனி முதல்கள் அல்ல என்பதுணர்க. இவ்வாறு முதல் ஒன்று தானே தானும் தனது பேற்றியுமாய் இருதிறப்பட்டு இயைந்து நிற்கும் இயைபே, 'தற்கிழமை' எனப்படும் என்க. தற்கிழமை யைத் 'தாதான்மியம்' என்ப.

மாணுக்கன் :

சிவமும் சத்தியும் வேறு வேறு முதல்கள் அல்லவாயின், சிவத்தைப், 'பெருமான்' என ஆண்மகனுகவும், சத்தியைப், 'பெருமாட்டி' எனப் பெண்மகளாகவும் வைத்து, 'அவ்விரு வரும் அப்பால்வேற்றுமைகட் கேற்ற வடிவும் பெயரும் உடைய ராய்த் தலைவனும் தலைவியுமாகித் தம்முட் கூடிக் களித்து வாழ்வர்' என யாண்டுங் கூறப்படுதலும், அங்ஙனங் கூறப் படுதற்கேற்ற வழிபாடு முதலிய பலவும் தொன்றுதொட்டு ஆன்றோர் ஒழுக்கத்தின்கட் காணப்பட்டுவருதலும் என்னையோ?

ஆசிரியர் :

நன்றே வினுயினுய் ! என்னையெனின், சிவத்தையும் சத்தி யையும் ஒருபாலாகவே ஒப்பக்கூருது, அங்ஙனம் பால்வேறு படக் கூறுதல்தானே அவ்விரண்டும் வேறு வேறு முதல்கள் அல்ல என்பதற்குச் சான்ருமாகலின் என்க.

இனிச், சிவம் எல்லாவற்றையும் ஆளும் முதற்பொருளும், சத்தி அம்முதற்பொருள் நினைத்தவாறே அமையும் அதனது பேற்றியுமாகலின், அவ்விரண்டும் முறையே ஆண் தன்மையும், பெண் தன்மையும் உடையவாதலும், அங்ஙனம் அவ்விரு தன் மைப்பட்டு இயைந்து நிற்கும் நிலையே உலகத்திற்கெல்லாம்

காரண நிலேயாகலின், அவ்விருதன்மைகளும் தலேவனும் தலேவியுமாய்த் தம்முட் கூடிக் களித்து, உலகத்திற்கேல்லாம் அப்பனும் அம்மையுமாய் நிற்றலும் பேறப்படும் என்க.

இங்ஙனம், 'சிவமும் சத்தியும் தலேவனும் தலேவியுமாய், அம்மையும் அப்பனுமாகி நிற்கும் என்பதுபற்றி, உலகத்துத் தலேவன் தலேவியரும், அம்மையப்பரும் போல, வேறு வேறு முதல்களாம் போலும் என மலேயாமைப் போருட்டன்றே, சிவபிரானது வடிவமும், உமையம்மையது வடிவமும் ஏனேத் தலேவன் தலேவியாது வடிவம்போல, வேறு வேறு நிற்றலோடமையாது, அவ்விருவரது வடிவமும் ஒரு வடிவின்கண்ணே சேம்பாதியாய் நிற்றலும், அச் சேம்பாதியாய வடிவம் சிவபிரான் உமையம்மை என்னும் இவருக்கன்றி ஏனேத் தலேவன் தலேவியர்கட்கின்ருயினமையும் உளவாயின என்க.

இங்ஙனம் ஆண்மையும் பேண்மையும் சேம்பாதியாய்நின்ற வடிவமே சிவபிரானுக்கு ஏனே வடிவங்களினும் பார்க்கச் சிறந்த வடிவமாம் என்பதனே,

" நீல மேனி வாலிழை பாகத்—தோருவன் "

(ஐங்குறுநூறு. கடவுள் வாழ்த்து),

" பேண்ணுரு ஒருதிறன் ஆகின்று "

(புறநானூறு. கடவுள் வாழ்த்து),

எனச் சான்ரோர் சேய்யுட்கண்ணும்,

" ஒருமை பேண்மை யுடையன் " (திருமுறை 1-1-5).

" தோடோரு காதனுகி ஒருகா திலங்கு
சுரிசங்கு நின்று புரள "

(திருமுறை. 2-84-5),

" புதுவிரி போன்சே யோலே ஒருகாதோர் காது
சுரிசங்க நின்று புரள
விதிவிதி வேத கீதம் ஒருபாகும் ஓத
ஒருபாகு மேல்ல நகுமால்;

மதுவிரி கொன்றை துன்று சடைபாகம் மாதர்
குழல் பாகமாக வருவர்;
இதுஇவர் வண்ண வண்ணம்: இவன்வண்ண வண்ணம்;
எழில்வண்ண வண்ணம் இயல்பே ''

(திருமுறை 4-9-10).

'' மலைப்பாவை ஓர் - கூறுதாங்கிய குழகரோ......
நமக் கடிகளாகிய அடிகளே '' (திருமுறை. 7-33-1).

'' தோலும் துகிலும் குழையும் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க வளையும் உடைத்தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ ! ''

(திருவாசகம் திருக்கோத்தும்பீ. 18)

எனத் திருமுறைகளினும் சிறந்தெடுத்து ஒதுமாற்றான் அறிக. இன்னும் மாதிருக்கும் பாதியனுய வடிவத்தின் இயல்பினைத் திருவிடைமருதூர் மும்மணிக்கோவையுள் பட்டினத்துப்பிள்ளை யார் வகுத்தோதி இனிது விளக்கியருளியவாற்றால் தெற்றென உணர்க.

மதிப்புரை

பிரயோகசந்திரிகை

திருச்செந்தூர் ஆலாலசுந்தர சிவாசாரிய சங்க வெளியீடு. தொகுத்தவர்:- கண்டனூர் சிவஸ்ரீ. அரு. இராமநாத சிவாசாரியார். ஸம்ஸ்கிருத பாஷா ஞானம் சிறிதுடையவரும் எளிதில் பூஜா முறைகளை நன்கு உணர்ந்துகொள்ளும்படி மூலாகமங்களையும், பலபத்ததிகளையும் ஆராய்ந்து தொகுக்கப்பட்டது. கிரியைகளைப் பற்றிய ஆராய்ச்சியும் ஆங்காங்கு தமிழில் இருப்பது போற்றத்தக்கது. ஆகம பாடசாலைகள் அரிதாக இருப்பதால், ஆங்காங்கு உள்ள சிவாசாரியர்கள் இதனை வாங்கிப் பயன்படுத்திக்கொண்டால் பூஜா முறை நன்கு அமையும்; உலக க்ஷேமமும் உண்டாகும். சைவ சித்தாந்த சாஸ்திர முறைகளை அனுசரித்து எழுதப்பட்டது.

வே. விசுவநாதக் குருக்கள், தி. பிள்ளையார்கோயில் தெரு, தேவகோட்டை என்ற விலாசத்திற்கு ஒரு ரூபாய் அனுப்பிப் பெறலாம், மூன்று ரூபாய் அனுப்பினால் சங்கத்தின் சார்பில் இதுவரை வெளிவந்துள்ள ஆறு வெளியீடுகளைப் பெறுவதுடன் சங்கத்திற்கும் உதவியதாக ஆகும். —கு, இராஜகோபால சாஸ்திரி.

காஞ்சிக் கரைகண்டநாதர் பதிகம்

சித்தாந்த சிரோமணி, சித்தாந்த ரத்நாகரம், மதுரகவி
முதுபெரும்புலவர்
வித்துவான், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள்
பிரின்ஸிபால், தருமபுர ஆதீனப் பல்கலைக் கல்லூரி.

நீரார் செஞ்சடையாய் உனை நித்தலும் கைதொழுவேன்
காரார் நீலகண்டா கனல்கையில் எடுத்தவனே
தாரார் கொன்றையனே பெருந்தைய லிடத்தவனே
காரார் காஞ்சிநதிக் கரைகண்டவ காத்தருளே. 1

ஞாலம் படைத்த வளாம் பெரு நாயகியோ டிருந்தும்
நீலம் பெறுகணையான் எதிர்நில்லா தொழித்தவனே
கோலம் பலவும் கொளும் ஒருகோ வேனும் மெய்ப்பொருளே
காலம் வளர் காஞ்சிக் கரைகண்டவ காத்தருளே. 2

பொன்னும் மண்ணும் பெண்ணுமாம் உயிர்ப்போக்கினை நீக்கிடு
[வான்
மன்னும் இருபொழுதும் வந்துன் மா மலர்த்தாள் பணிவார்க்
கென்னும் குறைவின்றியே நிறைவெல்லாம் அளித்தருள்வாய்
கன்னும் சேயாற்றங்கரை கண்ட கண்ணுதல் காத்தருளே. 3

வாஞ்சியம் பூம்புகலூர் ஆலவாய் திரு வண்ணமலை
காஞ்சியாம் உன் இடத்தே சென்று கண்டுனைப் போற்றிடுவோர்
தாஞ்சிறு போதிருந்தும் நின தாள்நிழல் இன்பம் உறும்
காஞ்சியிற் சேய் நதியின் கரைகண்டவ காத்தருளே. 4

பிரைசேர் பாலினைப்போல் உனைப் பேசாரை ஏசாரோ
உரைசேர் நான்மறையும் மற்றும் உள்ள கலையனைத்தும்
தரைசேர் வண்ணம் அருள் தந்த சத்துச் சித்தா நந்தமே
கரைசேர் காஞ்யில்வாழ் கறைக் கண்டனே காத்தருளே. 5

பிறைவாழ் செஞ்சடையாய் பலர் பேசு மெய்த் தேசிகனே
மறைவாழ் வாய்மலராய் உனைவாழ்த்தும் ஓ ராசையுளேன்
நறைவாழ் கொன்றையனே காஞ்சிநன்னகர் நின்றவனே
கறைவாழ் நீலகண்டா கரைகண்டவ காத்தருளே. 6

ஆணவம் போக்கியல்பாய்க் களிற்றுனை யுரித்தவனே
காணவும் கேட்கவும் தாள்புகழ் கண்ணுங் காதும் அளித்தாய்
நாணவுல களித்தாய் இன்பம் நல்கஉன் பூசை வைத்தாய்
காணவுல வுங்காஞ்சிக் கரைகண்டவ காத்தருளே. 7

மும்மலம் நீக்குவதாய்ப்புரம் மூன்றும் எரித்தவனே
செம்மலர் நோன்றுளின் நிழல் சேர்கதி யானவனே
தம்மலர் நெஞ்சிருத்தித் தொழும் தன்மையோர் எப்பொழுதும்
கைம்மலர் தூங் காஞ்சிக் கரைகண்டவ காத்தருளே. 8

தாமரை மேலவனும் உந்தித் தாமரையானும் தொழும்
வாமரை மான் உலவும் அண்ணுமலேவடி வானவனே
சாமரை வெண்கவரி கொண்டு தண் மலரால் வணங்கும்
காமரை யாள் காஞ்சிக் கரை கண்டவ காத்தருளே. 9

என்னை உடையவனே எனக் கின்னமுதாயவனே
அன்னை யிடத்தவனே அடியார்கள் உளத்தவனே
நின்னை வழிபடுவார் நெஞ்சின் நீளிருள் மாய்ப்பவனே
கன்னை யுறுமதில்சேர் காஞ்சிக் கடவுளே காத்தருளே. 10

நவமணிமாலை

வித்துவான், திரு. ப. இராமநாதபிள்ளை, தமிழாசிரியர், மன்னுர்குடி.

இராகம் - இந்தோளம் தாளம் - ஜம்பை

பல்லவி

சாமகிருஷ்ண சோதரி—சாமளாதேவியுன்
நாமமதை மொழிவாரே—மாநிலத்தில் உயர்வாரே (சாம)

அநுபல்லவி

மாமலர்க்கண் மாலுக்கே—மாலான் ருக்மணி
மாமணத்துக் கருள்செய்யு—மாதா மனேன்மணி (சாம)

சரணம்

மாமறையைத் தானுரைசெய்—ராமகிருஷ்ண தேவரும்
மாமன்ன ரஞ்சவரு—மாதவ சிவாஜியும்
மாராஜ போஜனுயர்—மாகாளி தாசனும்
மாதா உன்னருள்மைந்தர்—மாதருமை துர்க்கையே. (சாம)

பழந்தமிழ் நூல்களில் உயிர் வகைகள்

வித்துவான், திரு. செ. வேங்கடராமச் செட்டியார் அவர்கள்
ஆராய்ச்சி விரிவுரையாளர், அண்ணுமலைப் பல்கலைக் கழகம்,
அண்ணுமலைநகர்.

(மலர் 18. இதழ் 3 பக்கம் 176 இன் தொடர்ச்சி)

வண்டுகள் தேனையுண்ணும் மிகவிருப்பால் மகளிரின் கருங் கண்களையும் கருங்குவளை மலரென மயங்கி மொய்க்கும் இயல்பின ; என்பதை :

" உண்கண் வண்டின மொய்ப்பத்
தெண்கடற் பெருந்திரை மூழ்குவோளே " (ஐங் - 125)

என்பது காண்க. ஒரு பெண்டு, தன் மையுண்ட கண்களைக் குவளைமலர் என மயங்கி வண்டுகள் மொய்ப்பதைக்கண்டு அவற்றைக் கையால் கடிந்து நீக்க முயன்றும் முடியாமையால் இறுதியில் கடல் நீரில் மூழ்கித் தப்பித்த நிகழ்ச்சி இங்கு விளக்கப்பட்டிருத்தல் காண்க.

தாதுண்ணும் விருப்பத்தால் போதுகளை ஊதியவண்டுகள் அத்தாது உண்டு முடிந்தவுடன் அவ்வறிய பூவை விடுத்து வேறு புதிய பூவினைத் தேரும் இயல்பின - தமக்குத் தாதும் தேனும் அளித்த மலர் ஆயிற்றே என்று மீண்டும் அம்மலரை நினைந்து வருவதில்லை. இவ்வியல்பை :

" நெய்தல் நுண்டாதுண்டு வண்டினந் துறப்ப " (அகநா - 360)

என்ற அடி விளக்குதல் காண்க. மற்றின்பம் விழையாது சிற்றின்பமே விழைந்து நாள்தோறும் புதுப்புது மங்கையரை நாடித்திரியும் நயமில் ஆடவர்க்கும் இவ்வண்டுகட்கும் உள்ள ஒப்புமை கருதி ஐய உவமை வாய்பாட்டால்,

" மகிழ்நர் மாண் குணம் வண்டு கொண் டனகொல்
வண்டின் மாண்குணம் மகிழ்நன் கொண்டான்கொல் " (ஐங் - 90)

என ஒரு பரத்தை தலைவியின் பாங்காயினுர் கேட்பத் தலைவனை இழித்துக் கூறியிருத்தல் காண்க. ' மாண்குணம் '

என்பது இழித்தல் குறிப்பு. புதிய பூத்தோறும் வாவிச்சேல்லும் தன்மையை வண்டுதான் தலைவன்பால் கற்றதோ? அல்லது நாள்தோறும் புதிய மங்கையரை நாடி இன்புற்றுக் கழிக்கும் இயல்பைத் தலைவன்தான் வண்டினன்பால் கற்ருனோ? என்பது கருத்து. ''இவ்வாறு நாடிச் சேல்லுதல் தலைவன் இயல் பாகவும் அவன் மனைவி என்னைப் பழிப்பது ஏன்?'' என்பது அப்பரத்தையின் உட்கோள்.

ஒரு மலரில் ஒரு வண்டு தாதுண்டு நீங்கியபின் பிறி தொரு வண்டும் அம்மலரில் தாதுண்ண எண்ணி நண்ணுவ துண்டு. அம்மலரில் உள்ள எச்சில் தாது சிறிது உளதாயின் அதையுண்டு சேல்வதுமுண்டு. இவ்வாறே மேலும் மேலும் தாதுண்ணும் நோக்கமுள்ள வண்டுகள் பல ஒரே மலரில் ஒன்றன்பின் ஒன்ருய் வந்து அமர்ந்து சுவைத்துச் சேல்வதும் உண்டு; இந்த இயல்பை, ஒரு பரத்தையின்பால் பலர் வந்து இன்புற்று நீங்கும் இழிந்த நிலைமைக்கு உவமையாக்கி,

''விரிமலர்த், தாதுண்வண்டினும் பலரே
ஓதி ஒண்ணுதல் பசப்பித்தோரே'' (ஐங் - 67)

என ஒரு தலைவி, தன் தலைவன் வந்தபோது பரத்தையின் பாங்காயினுர் கேட்பக் கூறியுள்ளமை காண்க. பரத்தைக்கு மலரும், அவள் பால் இன்பம் நுகரும் ஆடவர்க்கு வண்டு களும் உவமையாம். பரத்தையரை விரும்பும் ஆடவர்க்கு வண்டுகளை உவமை கூறுவதுபோலவே ஆண் மக்களிடம் பொருள் உள்ளவரையில் இன்பம் அளித்துப் பொருள் குறைந்து அற்றவழி அவரைத் துறந்து வேறு சேல்வரை நச்சிச் சேல்லும் பரத்தையர்க்கும் உவமையாகக் கூறுவது உண்டு.

''மாயப் போய்பல கூட்டிக் கவவுக்கரந்து
சேயரும் நணியரும் நலனயந்து வந்த
இளம்பல் சேல்வர் வளந்தப வாங்கு
நுண்டாதுண்டி வறும்பூத் துறக்கும்
மென்சிறை வண்டினம் மானப் புணர்ந்தோர்
நேஞ்சேமாப்ப இன்துயில் துறந்து.''
(மதுரைக்கா - 570 - 575)

என்றது காண்க. இங்குப் பரத்தையர்க்கு வண்டும், தேன்மிக்க மலர்க்குச் சேல்வ இளைஞரும் தேனுக்குப் பொருட்சேல்வமும்

உவமையாதல் காண்க. தேன் உண்டு முடிந்தவுடன் வறும் பூவைத் துறந்துவிடும் வண்டுபோலப் பெண்டிரும் செல்வ இளைஞர் நெஞ்சு வருந்தத் துறந்துவிடுவர் என்பது கருத்து.

இனிச் செல்வம் நிறைந்துள்ள காலத்து நண்பராயிருந்து அது குறைந்த காலத்தில் நட்பை விடுத்து வேறு செல்வர்களை நாடிச்செல்லும் நன்றிகெட்ட மாக்களுக்கு இவ்வண்டு உவமேய மாக்கப்பட்டுளது.

> '' நிறைந்தோர்த் தேரும் நெஞ்சமோடு குறைந்தோர்
> பயனின்மையின் பற்றுவிட் டோரூஉம்
> நயனில் மாக்கள் போல வண்டினம்
> சுனைப்பூ நீத்துச் சினைப் பூப்படர.'' (அகநா. 71)

என்றது காண்க. மாலைக்காலம் வந்தவுடன் சுனையிலுள்ள தாமரை மலர்கள் குவிகின்றன. இனி அம்மலரில் தேனுண்ண இயலாது என்பதுணர்ந்த வண்டுகள், அந்தச் சுனைப்பூவை விடுத்து மாலையில் புதிது பூக்கும் மரங்களில் உள்ள மலர்களை நாடிச் செல்கின்றன. இவ்விழிகுணமுள்ள வண்டுகட்கு அந் நன்றிகெட்ட கயவர்களே பொருத்தமான உவமை ஆகின்றனர்.

ஒரு வண்டு, சுனையில் கூம்பியுள்ள தாமரை அரும்பை அலர்த்திவிட்டுப் பின் வேங்கைமரத்தின் விரிந்த பூங்கொத்துக் களில் ஊதியது; பின்னர்க் காந்தளின் தேன்மிக்க மலர்க் குலையில் தங்கித் தேனையுண்டு தூங்குகின்றது. அவ்வாறு தூங்கும்போது யானையின் பெரிய கன்னத்தில் ஒழுகும் மத நீரைப் பருகுவதாகக் கனவு காண்கின்றதாம்.

> '' நளிசுனைக், கூம்புமுகை யவிழ்த்த குறுஞ்சிறைப் பறவை
> வேங்கை விரியிணர் ஊதிக் காந்தள்
> தேனுடைக் கவிகுலைத் துஞ்சி யானை
> இருங்கவுள் கடாஅங் கனவும்......ஊர்,'' (அகநா. 132)

என்றது காண்க. இதனால் வண்டு மலர்களில் உள்ள தேனை யுண்பதுபோலவே யானையின் மணமிக்க மதநீரையும் விரும்பிப் பருகும் இயல்பினது என்பதுணரலாம்.

" மிஞிறு மூசுகவுள சிறுகண் யானை." (அகநா. 159)

என்பது காண்க. வண்டின் இனிய ஓசையை யாழிசைக்கு உவமையாகக் கூறுதல் புலவர்களின் பொருந்திய வழக்கமாகக் காணப்படுகின்றது.

" முதிலை யோழித்த போதவிழ் பெருஞ்சினை
வல்லோன் தைவரும் வள்ளுயிர்ப் பாலை
நரம் பார்த்தன்ன வண்டின முரலும்." (அகநா. 355)

என்பது காண்க. இதில் பழைய இலைகள் உதிரப் பெற்ற கோங்கின் போதுகள் மலர்ந்த பெரிய கிளையில் வண்டுகள் முரலும் இனிய ஓசைக்கு உவமையாக யாழ் எழுப்புதலில் வல்ல பாணன், பாலைப்பண்ணை நிறுத்தி யாழ் நரம்பைத் தைவருங்கால் எழும் இனிய யாழோசையைக் கூறியிருத்தல் காண்க.

" வடிநரம் பிசைப்பபோல் வண்டோடு சுரும்பார்ப்ப." (கலி - 36)

" யாழிசை கொண்ட இனவண்டு இமிர்ந்தார்ப்ப." (கலி - 131)

" மலைப் பூஞ்சாரல் வண்டு யாழாக." (அகநா - 82)

என்ற இடங்களிலும் யாழின் இசையை வண்டின் இமிர் ஒலிக்கு உவமை கூறியிருத்தல் காணலாம்.

மதிப்புரை

அசல் மருத்துவக்குடி வாக்கியப் பஞ்சாங்கம்

வாக்கியரீதியில் G. S. வேங்கடராம அய்யர் அவர்களால் அஹோராத்ர நிர்ணயப்படி திதிகள் போடப்பட்டு கணிக்கப்பெற்றது. பலராலும் ஆதரிக்கப்பட்டது. தானுக சுபா சுப நாட்களைத் தெரிந்துகொள்ளவேண்டிய ஆரம்பஜ்யோதிஷ விஷயங்களும் இதில் அடங்கியுள்ளன. விலை. 0—7—0.

—கு. இராஜகோபால சாஸ்திரி.

சிவாகமம்

[கிரியா ஸாரம்]

ஆகம வித்துவான்,
திரு. S. சுவாமிநாத சிவாசாரியர்,
தலைமை ஆசிரியர்,
வேதசிவாகம பாடசாலை, தருமபுரம்.

(மலர் 18, இதழ் 4, பக்கம் 274 இன் தொடர்ச்சி)

சரீரத்திற்கு மூலாதாரஸ்தானம் எவ்வாறு முக்கியமோ அதுபோல் ஆலயமும் முக்கியம். மூலாதார ஸ்தானத்திற்கு ஊனம் வந்தால் சரீரம் கெடும். அதுபோல் ஆலயத்திறகுக் குறைவு ஏற்பட்டால் ஆன்மவர்க்கமழியும். மற்றும் மூலாதாரத் திலுள்ள குண்டலினியின் நடுவில்தான் இறைவனின் பீஜாக்ஷர மான ப்ராசாத மந்திரம் இருக்கிறது. ஆலயத்தில் ப்ராசாத மந்திரத்தின் லக்ஷ்ய மூர்த்தியான சிவபெருமான் வீற்றிருக்கிறார். ஆதலால் ஆலயம் ப்ராணிகளுக்கு மூலதாரம் போன்றது என்று ஆகமம் கூறுகிறது.

அத்தகைய ஆலயங்களில் செய்யப்படும் பூஜையின் ஒவ்வொரு அம்சமும். ஆன்மவர்க்கங்களின் நலனுக்காகவே செய்யப்படுகிறது. அதாவது, சிருஷ்டிகிருத்யமான அபிஷேகத் தினால் ஸ்தாவர ஜங்கமங்களான எல்லாவுலகமும் விருத்தி யடையும். நைவேத்தியம் என்ற ஸ்திதிச்செயலால், உத்பத்தி யடைந்த யாவும் செழிப்புற்றோங்கும். சம்ஹாரக்ருத்யம் எனப்படும் பலிபூஜையால், உலகத்தின்கண் விளங்கும் எப் பொருள்களும் வீர்யமுள்ளதாயும் மக்கள் பௌருஷத்தன்மை யுடையவர்களாய் விளங்குவதுடன் அழியவேண்டியவைகள் அழியும் தன்மையுடையதாகும். தீபம் என்ற திரோபவ கிருத்யத்தினால் மக்களின் நலம் கருதி மறைத்துக் காண்பிக்க வேண்டியது மறைந்து விளங்கும். அனுக்ரஹம் என்ற ஹோமத்தினால் வேண்டியவர்களுக்கு வேண்டிய பலனை யளிக்கும் தன்மை உண்டாகும்.

இவ்வைந்தொழிலினுள் நடுநாயகமாக விளங்கும் பலிஎன் பது சௌசகம், சாந்திகம், சௌக்யகம், சைவிகம். என நான்குவிதப்படும்.

இவற்றில், நந்தி தேவர் முதலிய தேவர்களுக்கும். இந்திரன் முதலிய திக்பாலகர்களுக்கும் வஜ்ராயுதம் முதலிய

ஆயுதங்களுக்கும் ஆமோதன் முதலிய ஆறு பூதங்களுக்கும் தனித்தனியாக பூஜையின் முடிவில் பலி போடுதல் சைவிகம் என்ற முறையாகும். இம்முறைப்படி பலிபோடவேதான், கருப் பக்கிரஹத்தின் சுற்றிலும் எட்டு பலிபீடங்களும், துவாரபால பலி முதலியது போட நந்தியின் முன் ஒரு பலிபீடமும் பிர திஷ்டை செய்யப்பட்டிருக்கிறது.

அதாவது உள் நந்திதேவரின் முன் அவ்விருஷப தேவரின் பொருட்டு பலிபோடவும் துவார பாலகர்களான நந்திமகா காளர்களின் பொருட்டு பலி போடவும் ஒரு பலிபீடமும் - கர்ப்பக்கிரஹத்தைச் சுற்றிலும், முறையே தென்கிழக்கு முதல் வடகிழக்கு வரையில் அக்னிதேவன், சப்த்தமாதா, விநாயகர், சுப்பிரமண்யர், ஜ்யேஷ்டாதேவி, துர்க்காதேவி க்ஷேத்ரபாலர். என்பவர்களுக்குப் பலி போட ஏழு பலி பீடங்களும் ஆக எட்டு பீடங்களும் முதல் ஆவரண பலி பீடங்கள். அந்த நந்தி தேவரின் பின்புறமுள்ள பலி பீடத்தில் ஸகளமூர்த்தியாகிய சூரியதேவனுக்குப்பலி போடவேண்டும்.

இரண்டாவது ஆவரணமான இரண்டாம் பிராகாரத்திலுள்ள த்வார பாலகர்களான, தண்டி முண்டி என்பவர்களுக்கும் அங்குள்ள மஹோகக்ஷம் என்ற பெரிய நந்திக்கும் பலிபோட ஒரு பலிபீடம் காணப்படுகிறது. (முதல் ஆவரணத்தில் விளங் கும் நந்தி தேவருக்கு அல்ப்போக்ஷம் என்றும் இரண்டாவது ஆவரணத்திலுள்ள நந்தி தேவருக்கு மஹோக்ஷம் என்றும் பெயர்) பிறகு இந்திரன் முதலிய எண்மர்களுக்கும் பலிபோட சுற்றிலும் எட்டு பலி பீடங்களும், பிரம விஷ்ணுக்களுக்குப் பலிபோட மற்றும் இரண்டு பலி பீடங்களும் ஆக 10 பீடங் களும் வேண்டும் என்று முலாகமத்தாலறியப்படுகிறது.

இதுபோலவே, மூன்ருவது ஆவரணத்தில், விளங்கும் நந்திதேவரின் முன் இருக்கும் பலிபீடத்தில் துவார தேவர் களின் பொருட்டும் அவ்விருஷப தேவரின் பொருட்டும் பலி போட்டு சுற்றிலுமுள்ள பலிபீடங்களில் வஜ்ரம் முதலிய ஆயுத தேவதைகளுக்கும் பலிபோடவேண்டும்., அதன் பின்புறமுள்ள மஹாபலிபீடத்தில் மேல்கர்ணிகையில் விக்னன் என்ற மூர்த் திக்கும், சுற்றிலுமுள்ள ஆறு தளங்களிலும், ஆமோதன்,

ப்ரமோதன், சுமுகன், துர்முகன், அவிக்னன், விக்னகர்த்தா என்ற அறுவர்களுக்கும் சேர்த்து ஒரு பலி போடவேண்டும் என்பது விஸ்தாரபக்ஷம், இது சைவிகம் என்ற முறையாகும்.

முதலாவது இரண்டாது ஆவரணங்களில் பலிபோட்டு. மஹாபலிபீடத்தில் பலிபோடுவது சௌக்யகம் என்ற முறை இரண்டாம் பக்ஷமாகும்.

முதல் ஆவரணத்தில் பலி போட்டுவிட்டு, வெளியிலுள்ள மஹாபீடத்தில் பலிபோட்டு முடிப்பது சாந்திகம் என்ற மூன்றும் பக்ஷம்.

எல்லாத் தேவர்களையும் நினைத்து மஹாபலிபீடத்தில் மாத்திரம் பலி போடுவது சௌசகம் என்ற கடைசி முறை.

अथवा सर्वदेवानां बलिपीठे बलिं क्षिपेत् ।

அதவா ஸர்வதேவாநாம் பலிபீடே பலிம் க்ஷிபேத் ।

அல்லது மஹாபலி பீடத்தில் எல்லா தேவர்களுக்கும் பலி போடவும் என்று முடிவில் விதி கூறுகிறது.

தத்துவத்தின் முறைகொண்டு பார்க்குமளவில், விக்ஞான கலர், ப்ரளயாகலர் ஸகலர் என்ற மூன்றுவித பசுவின் தோற்றமும் காணப்படுகிறது.

அதாவது முதல் ஆவரண நந்தி தேவர் விக்ஞானகலர் போன்றவர் ஒருமலமுடையவர். ஆதலால் நந்திதேவரின் முன்பு ஆணவம் என்ற ஒரு மலவடிவமான பலிபீடம் தோற்றமளிக்கிறது.

இரண்டாவது ஆவரணத்திலுள்ள திருநந்தி தேவர் ப்ரளயாகலர் போன்றவர். அதாவது ஆணவம் கர்மம் என்ற இரு மலமுடையவர். இரண்டாவது நந்தி தேவரின் முன்புள்ள பலிபீடமும், முதல் ஆவரண நந்திதேவரின் பின்புறமுள்ள பலிடமும் ஆணவம் கன்மம் போன்றது. உள் நந்திதேவரின் முன்புள்ள பலிபீடம். நந்தி தேவருக்கு மறைவாக விளங்குவதால் திரோதான சக்தியை ஒக்கும்.

மூன்ருவது ஆவரணத்தில் விளங்கும் திருநந்திதேவர் ஸகளரைப் போன்றவர். அந்த நந்திதேவர் முன்பு உள்ள பீடத்துடன் கூடி முன் இரண்டு ஆவரண நந்தி தேவர்களின் பின்புறமுள்ள பீடங்கள் ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலத் தோற்றமுடையது, விந்து திரோதானம் என்ற இரண்டும் மறைந்து விளங்குகிறது. அது காரணம் பற்றியே பலிமுறையில் முதல் ஆவரணத்தில், சத்துவமூர்த்திகளான விநாயகர் சுப்பிரமணியர் முதலியவர்களும், இரண்டாவது ஆவரணத்தில் ரஜோகுண மூர்த்திகளான இந்திரன் முதலானவர்களும் மூன்ருவது ஆவரணத்தில் தமோகுணம் நிறைந்த ஆயுத ஜாலங்களும் பூஜிக்கப்படுவது சான்ருகும்.

மற்றும் சகளர்போன்றவரான மூன்ருவது ஆவரணநந்தி தேவர், சாமுசித்தர், பிராகிருதகர், வைனயிகர் என்ற மூன்றுவித ஆன்மாக்களின் முதலாவதான சாமுசித்தர் போன்றவர் ப்ராக்ருத வைனயிகர்களின் தோற்றம் அருபமாகவுடையது. பஞ்சப்ராகார ஆலயமாயின், இவர்களுக்கும் வடிவம் காணப்படும் என்பது சைவசித்தாந்தத்தின் சூக்ஷ்மமானகருத்து.

இவ்வாறு ஆகமப்பிரமாணங்களாலும் சித்தாந்தத்தின் நுண்ணிய கருத்தாலும் நந்திகேச்வரரின் முன்புறமும் பின்புறமும் பலிபீடம் அமைந்திருப்பது சாலச்சிறந்தது என்பது புலனுகிறது.

குமரகுருபரன்

ஆண்டுச் சந்தா 1 — 50

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபரசுவாமிகளினுடைய திருப்பெயர்பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலியவற்றை எளிய நடையில் தெளியச்செய்யும் ஆராய்ச்சி விளக்கத்துடன் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின்வண்ணம் இவ்விதழ் வெளிவருகிறது.

விலாசம் :- நிர்வாக ஆசிரியர், உயர்திருவாளர்.

T. M. குமரகுருபரன் பிள்ளை B.A., B.L., அவர்கள்,

குமரகுருபரன்'' ஆபீஸ், ஸ்ரீ வைகுண்டம்.

பெறற்கு அரிய குருவருள்

முத்து

24—3—1959 இரவு 11 மணி, வெண்ணிலாக் காயும் தண்ணிலாவும்போழுது, தருமையாதீனத்து வினைஞர் பலர் முந்தியே சென்று, கடற்கரைக் காட்சியில் உடற்கரையாமல் உளங்கரைய உயிர் உருகக் கடவுள் திருவடியை நினைந்து நிற்கின்றனர். 'அலையிடைப் பிறவா அமிழ்து' 'அலையிடை அலையாமல் நிலையாக நிற்கின்றது. அது பத்தினித் தெய்வமான கண்ணகியின் எழிலுருவம். அதன் தென்பால், கடலிற் காவிரி புகும் இடம். 'காவிரிபுகும் பட்டினம்' (காவீரிப்பூம் பட்டினம்) என்ற பெயர்க்கு உரிய காரணம் விளங்கும் இடம்.

'இன்றுணை மகளிர்க்கு இன்றி யமையாக்
கற்புக் கடம்பூண்ட இத் தெய்வம் அல்லது
பொற்புடைத் தெய்வம் யாம் கண்டிலமால்
வானம் பொய்யாது வளம்பிழைப்பு அறியாது
நீள்நில வேந்தர் கொற்றம் சிதையாது
பத்தினிப் பெண்டிர் இருந்த நாடுஎன்னும்
அத்தகு நல்லுரை'

இளங்கோவடிகள் திருவாய்மலர்ந்தது. அது சிறிதும் பொய்யாது. அங்கே தருமையாதீனத்து 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் எழுந்தருள்வதை அறிந்து, அன்பர் பற்பலர் இன்பம் நிலவும் இருதயத்துடன் எதிர்நோக்கி யிருந்தனர். கடலுக்கும் கார்க்கும் உறவு மிக நெருக்கம். ஆயினும், அவர்கள் எழுந்தருளி வரும் கார்க்கு அக்கடற்கரையோடு நெருக்கமான உறவில்லை. 'மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக் கண்ணகிதேவியின் சிலை இருக்கும் நிலைக்கு ஒருபால் நின்றது. குருநாதர் அதனின் நீங்கியபொழுது, அன்பர் அனைவரும் வணங்கிக் காவணம் உள்ள பூவணமணலிடத்துக்கு வழிபட்டுக் கொண்டு சென்றனர்.

நள்ளிரவு மணி 12-30. திங்களைப் பாம்பு தீண்டிற்று. எங்களைக் கடல் வேண்டிற்று. கடலில் ஆடியருளினர் குருநாதர். காவலரும், ஏவலரும், ஆவலரும், பாவலரும். நாவலரும் கடலாடி உடலாடிக் காவிரியாடிக் காலாடிக் கரையோடினர். ஈரிய உடைகளைக் களைந்தனர். அங்கு நீராடும் முன்னரே குருவருள் வடிவாகிக் கைவந்த சீரிய உடைகளை அணிந்தனர். பட்டாடை, சரிகைத்துணி, நூலுடை ஆகிய முத்திறத்திலும் விலை வரம்பிடற்கு அரிய பலதிறம் அங்கே அன்று குருமணி திருக்கை வழக்கத்துக்குத் தோடக்கம் ஆயிற்று. நிலமகளுக்குக் கடல் ஒன்றே ஆடை. கடலில் நள்ளிரவில் பல மக்களுக்குக் குருவருளால் கிடைத்த ஆடைகளை அளவிடல் அரிது. எனக்குப் பத்தாறு கிடைத்ததால் அதை உடுத்துக்கோண்டு, வழிபாடு செய்திருந்தபோது பார்த்திருந்த பலருள், அந்தணர் ஒருவர் என்னைத் தம் இனத்தவராக எண்ணி மயங்கினராம். நான் அந்தணன் என்று அவர் முன்பே அறிவார் ஆயினும் அன்று ஆடையால்மட்டும் கருதினர் ஆவார். கதராடையைக் கட்டிக் கோண்டு, தம்மைத்தாமே நோக்கி மகிழ்ந்த அறிஞரும் பலர். இந்நாளில், இடையிரவில், எவர்க்கும் பேறற்கு அரிய இக் கடற்கரை யின்ப வழிபாட்டில் நாமும் கலந்து தேய்வாமிர்தம் உண்டு திளைக்கச் செய்த திருவருளையும் குருவருளையும் வியந்து வியந்து நயந்து நயந்து பாராட்டிப் பேச விரும்பிப் பயந்து பயந்து மேன்குரலில் வேளியிட்டனர் சிவார்ச்சனைச் சேல்வரும் சிவநேசச் சேல்வரும். ஏனைய தவநேசச் சேல்வரும் தம்தம் பேரிய பாக்கியத்தைப் பாராட்டிக்களித்தனர். தீண்டிய பாம்பு திங்களை விட்டது. ஈண்டிய கூட்டமும் கடலில் ஆடிக் காவிரியாற்றின் கலப்பில் ஆடி உலப்பரிய இன்ப வழிபாடு புரிந்தது. பழங்கள் உண்டது. பயணம் சேய்தது. அவரவர் வந்தவாறே மீண்டனர். பின்னைய நிகழ்ச்சி என்ன என்று கேட்கும் பிரஸ்னைக்கு அன்றைய பங்குனிஉத்தரமே உத்தரம் சோல்லும். வாழ்க குருமணி. வயங்குக பேரியோர்கள் வைத்துக் காத்த மரபு.

போக்கும் வரவு மிரவும் பகலும் புறம்பு முள்ளும்
வாக்கும் வடிவு முடிவுமில் லாதோன்று வந்துவந்து
தாக்கு மனோலயந் தானே தருமெனைத் தன்வசத்தே
ஆக்கு மறுமுக வாசோல் லோணுதிந்த வானந்தமே.

*உருப சோருப அகவல்

திருமால் பிரமன் றேடற் கரியோன்
தருமா கமத்திற் றேரியச் சாற்றிய
பதிபசு பாசத்தி னுண்மை பகர்வன்
விதிமாண் கோள்கை விளம்பக் கேண்மோ

பதி

பதியுரு விச்சா ஞானம் படர்தோழில்
விதியாஞ் சோருப மேலா னந்தம்
நின்மலஞ் சுபாவம் வியாத்தி நிறைவே
உன்னும் வியாபக முணர்வசித் துதித்த
லேண்ணுங் குணமே யைந்தோழி லிலக்கணம்
வண்ண வருவுரு வுபய மன்னுத
லிறைவன் ஞான மேல்லா மறித
லறிவறி வாதல் தரிசனம் ஆகுந்
தாபர சத்தியிற் சார்தல் யோக
மன்பர்க் களிப்ப தவன்போ கம்மே
விசேடம் விருப்பு வேறுப்பற் றிருக்கை

பசு

உசாவு பசுநேறி யுரைப்பக் கேண்மதி
யுருவம் பஞ்ச கஞ்சுக முரைக்கிற்

---

* இந்நூலை இயற்றியவர் காவை ஸ்ரீமத் அம்பலவாணத் தம்பிரான் சுவாமிகள். இவர்களே சிவப்பிரகாசத்தின் கருத்தைச் சுருக்கமாக அறிவிக்கும் வேண்சேந்துறையில் அமைந்த கோளுக் களையும் திருவருட்பயன் உதாரணகலித்துறையையும் அருளியவர். ஞானவரண விளக்கத் தரும்பத விவேகத்தில் சுபக்கத்திலும், சிவப் பிரகாசத்திற்கு மதுரை சிவப்பிரகாசர் இயற்றிய உரையில் எழுபத் தோன்ருவது திருப்பாட்டிலும் இவ்வகவலின் சில அடிகள் மேற் கோளாகக் காட்டப்பட்டிருக்கின்றன. ஆசிரியர் மெய்கண்டார் மரபில் வந்தவர், உமாபதி சிவாசாரியாருக்குப் பிறகும், மதுரை ஞானப்பிரகாசருக்கு முன்பும் அதாவது சுமார் பதினுன்காம் நூற் ருண்டில் வாழ்ந்தவர். சைவ சித்தாந்த மகா சமாஜப் பதிப்பில் அறியப்படாததேன அறிவிக்கப்பட்ட இந்நூல் ஆதீன நூல்நிலைய ஏட்டுப்பிரதிகளிலிருந்து எடுத்து வேளியிடப்படுகிறது.

சோருப மாணவம் நீங்கிய தோற்றம்
விஞ்சிய சுபாவம் மலத்துடன் மேவுதல்
தஞ்சமில் வியாத்தி தத்துவ வளவே
வியாபக மாண்ம வறிவுமே லிடுதல்
தயாவில் குணம்யா னெனதெனச் சாற்றல்
தெருளு மிலக்கணஞ் சேர்ந்த தாகை
யருளற்ற் விக்க அறிவது ஞானம்
மன்னரு டன்னில் மன்னுயிர் மன்னுத
லின்னுயிர்த் தரிசன மென்பர் நல்லோர்
சுத்திதன் போதம் தோன்ரு திருக்கை
யத்தகு மிலாபம் ஞேயத் தழுந்துதல்
விசேடமெண் சித்தியெண் செல்வ மேவுத

1. ஆணவம்

லுசாவு மாணவத் துருவம் கேண்மோ
இருட்கிரு ளுருவம் சோருப மேதெனின்
வருத்துமஞ் ஞானஞ் சுபாவ மறைத்தல்
மேவுயி ரணுத்திலு மேவுதல் வியாத்தி
† பாவு மிகுதி குறைவு வியாபகம்
நிலைக்குணங் கணந்தோறு மவத்தை நீடுதல்
இலக்கணம் கன்ம வொப்பினி லழிதல்
தெரிசனங் காண்டல் திகழரு ளதனிற்
றுரிசற வடங்குதல் சுத்தி யாகும்
மிக்க வதீத மேவுதல் விசேடம்

2. திரோதம்

தக்க திரோதத் தகுதி தானு
மெண்ணு முருவம தருவுரு வேய்தல்
புண்ணிய சோருபங் கிரியை பொருந்துதல்
சுபாவம் வினையைத் தொழிற்படுத் துதலே
அபாய வியாத்தி குடிலைக் கப்புறம்
கன்மத் தளவினிற் காண்டல் வியாபகம்
மன்னிய குணம்வினை யளவு மறைக்கை

---

† பாவம் என்றிருந்ததோ ?

யிலக்கணம் சத்திநி பாதத் தேய்தல்
துலக்கமி றேரிசனந் தோன்றனுக் கிரகம்
ஆய சுத்தி யருட்சுத்தி யாகை
பாவ வினையு நன்றேனப் பதித்தல்
மேவும் விசேட விதியே யாகும்

3 (அ) சுத்தமாயை

வடிவில் சுத்த மாயை வகுத்தல்
குடிலை யுருவங் கூறுத லாகு
[1] மருவுரு முப்பதுஞ் சொரூப மென்பர்
[2] தனுமுத னாலும்விஞ் ஞான கலர்க்காய்
[3] நனிபத முத்தி நண்ணுதல் சுபாவ
மழிவில் வியாத்தி யணுக்க ளளவே
எழுகோடி மந்திர வியாபக மென்ப
நடத்துங் கருவியைந் தாங்குண நாடிற்
சடத்துவா வாகை யிலக்கணந் தானே
அலகில் பலகலை யாத லறிவே
[4] சாலப் படர்த றரிசனங் காணின்
மேலைச் சுத்தி சிவன்விரும் பாதனம்
விசேட மெய்யை மெய்யாய் விளக்கல்

(ஆ) அசுத்தமாயை

மருவு மசுத்த மாயை வகுக்கில்
உருவ மருவ மாகுஞ் சொரூபம்
வடிவில் சுத்தா சுத்த வகுப்பே
சாற்றுஞ் சகலர் நால்வகை யோர்க்கும்
தோற்றுந் தனுமுத னடத்துதல் சுபாவம்
விளங்கு முப்பத் தோன்றும் வியாத்தி
துலங்கு வியாபகந் தோற்றமு மொடுக்கமு
யிதன்குண தத்துவ மென்பத் தேழே

---

[1] முனுமா யேயத் துய்த்திடல் சொரூபம். [2] தனுமுதற் கொடுத் துச்சார் பதபத்தி. [3] யெனவொரு மலத்தார்க் கேய்வது சுபாவம், [4] யேலவிவை யறித றேரிசன மியல்பின் என்பது ஞானாவரண விளக்கத்துப் பாடம்.

விதம்படு மிலக்கணம் வித்துல கினுக்காதல்
தெரிசனம் பஞ்ச கஞ்சுகஞ் செப்பில்
பொருவில் சுத்தி விந்துவிற் பொருந்துதல்
மெய்யெனப் பொய்யைக் காட்டல் விசேடம்

4. கன்மம்

செய்யும் கன்மத் தெரிவை விரிக்கில்
தன்மா தன்மந் தங்குத லுருவே
யின்பந் துன்ப மெய்துதல் சொருபந்
தோற்றமு மீறுமுண் டாக்குதல் சுபாவம்
ஆற்றும் வியாத்தி யதோமாயை யளவே
யாயுப் போகச் சாதி வியாபக
மேயுங் குணமன வாக்குட லெய்தல்
நானு வுணவிலக் கணம்நற் றரிசனந்
தானுந் தெய்விக மாதி தானே
சுத்தி புசித்தாற் றொலைதல் விசேட
மத்தகு சஞ்சித மாதியா கும்மே

5. மாயேயம்

[1] கருவி விரிவைத் தெரியக் காட்டி
லாதி நிலமுத னாத மந்தம்
சகமுதல் சமுத்திர முடிவ தாக
விகமுறப் பார்த்தல் உருவ மென்பர்
சொருபந் தானே சூக்கும வுடலே
மருவும் வியாத்தி தனுகர ணாதி
தன்மை வியாபகந் தன்ற னளவு
மன்னி நிறையும் வகுப்பா கும்மே
பெருகும் வினையாற் பேதித்தல் குணமே
யருளிலக் கணமுயிர்க் கறிகருவி யாதல்
[2] உருவரு வாத றரிசன மோதின்
மருவு சுத்தியிரு மாயை [3] மன்னுதல்

---

[1] கருவி விரிவைத் தெரிவுறக் காட்டி
லுருவ மென்ப தண்டபிண் டத்தொரு
மலைகடல் புவன போகமற் றியாவையும்
நிலமுத னாதாந்த நிகழ்ச்சி யாகும்,

[2] உருவரு வாதலை யுணர்வது தரிசனம், [3] நீங்குதல்.

[4] விளங்கு முப்பத் தாறும் விசேடம்
களங்கமில் பதிபசு பாசக் கருத்தினை
யிவ்வகை தெரிய யியம்பிய தேசிகன்
காரணி பொழில்சூழ் காவையம் பலவன்
ஏரணிசித்தி யுயிர்க் கெய்துத லெடுத்தே.

---

[4] விளங்கு முப்பத் தாறொடு மறுபது
முளங்கொளக் காரியத் துறுவது விசேடம்.

என்பன ஞானவரண விளக்கத்துப் பாடம்.

1. உருவம். 2. சொரூபம். 3. சுபாவம். 4. வியாத்தி, 5. வியாபகம். 6. குணம். 7. இலக்கணம். 8. ஞானம். 9. தரிசனம். 10. யோகம். 11. போகம். 11, விசேடம் என்பன பதிக்குரியன. பசுக்களுக்கு 10, 11 மட்டும் முறையே சுத்தி, லயம் என்று நிற்கும், பிற அவையே.

மதிப்புரை

வைஷ்ணவி சந்நிதி முறை

ஆசிரியர் :- தணிகைமணி, திரு. வ. சு. செங்கல்வராயபிள்ளை அவர்கள் M. A. கிடைக்குமிடம் ;- சன்மார்க்க சங்கம், வைஷ்ணவி ஆலயம். திருமுல்லைவாயில், ஆவடி (வழி). விலை ஒருரூபாய். பக்கங்கள் 124.

திரு. பிள்ளையவர்கள் சீரிய தமிழ்ப்புலமையும், முருக பக்தியும் உடையவர். 'தேவார ஒளி நெறி' ஆராய்ச்சியாற் சைவ உலகின் நிலைபெறுடைய நற்பணியாளர். அப்பெரியார் வடதிருமுல்லைவாயிலின் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் வைஷ்ணவி மீது தேவி அனுபூதி, தேவி அலங்காரம் என்ற இரு நூல்களைப் பாடியுள்ளார். தேவிப்பத்து என்பதும் உடன் சேர்க்கப்பெற்றுள்ளது. தெளிவான குறிப்புரை, உரையும் உள்ளன. கந்தரனுபூதி, கந்தரலங்காரம் இரண்டையும் தழுவி இத் தோத்திர நூல்கள் எழுந்துள்ளன. அபிராமி அந்தாதியின் போக்கையும் அலங்காரப் பகுதிகள் சில நினைவூட்டுகின்றன. தம்முடைய உருகிய நெஞ்சால் தணிகைமணியவர்கள் தந்திருக்கும் இப் பாமாலை அனைவர்க்கும் பயன்படும் என்பதுறுதி. குறைந்த விலையில் ஆன்மீக விஷயமாக வரும் இக் கவி நூலைத் தமிழ் மக்கள் வாங்கிப் பயின்று திருவருட்கு இலக்காவார்களென நம்புகிறோம். —சோ. சிங்காரவேலனார்.

பிள்ளைத்தமிழ்ப் பெருமை

வித்துவான், திரு. வை. கல்யாணசுந்தரம் அவர்கள்

தமிழாசிரியர், கீழைக்கலை உயர்பள்ளி, தருமபுரம்,

தொடக்கவுரை :

"சைவமும் தமிழும் தழைத்தினி தோங்குக" - என்ற சொற்றொடர்க்கோர் தனி விளக்கங்கள் தந்தது, குமரகுருபர ரின் தோற்றமும் செல்வமுத்துக்குமரனின் திருவருள் நாட்ட மும். குருவருள் கூட்டக் குருமுனியாய்ச் சென்று குமரன்பேரில் கோழி தமிழ்ப்பிள்ளைப் பாட்டை அருளினார். பிறந்ததுமுதல் பிள்ளையாய் உடன்நின்று திருவருள்கூட்டி, குருவருள் காட்டிய செந்திலானை, தமிழ் விளைக்கவந்த வேளூர் முருகனை, அப் பிள்ளைத்தமிழ்கொண்டே போற்ற எண்ணிப் புகழ்ந்தார் புள்ளி ருக்கு வேளூரைப் போற்றினார் நாற்றிசையும் நலங்கள் பலவற்றை.

தமிழ் வகையில் பிள்ளைத்தமிழ் பாடுவது பெரும் பேரறிவு. அதை இரு கூருக்கி மதுரைத் தாயையும் வேளூர்ச் சேயையும் விதந்தோதிய பெருமை குமரகுருபரரையே சாரும். அவ்வருட் குமரகுருபரர், பிள்ளைத்தமிழ்ப் பெருமையைப் பிழிந்து தருகிறார் கொள்ளை கொள்ளையாக !

ஐந்து வயதுமுதல் அருள்திறம் கண்ட செந்திலானை, கந்த புரி முருகனை, உருத்திரசன்மனாக வந்துதவிய குகனை, நக்கீரர் மலரிடைக் கண்ட மருகனை, குறுந்தொகை காட்டும் கோழிக் கொடியோனை, காணுகிறார் குமரகுருபரர். எவ்வாறு ? குழந்தை வடிவிலே; அதுவும் மூன்றுமாத இளம் பருவத்திலே, காக்கக் கருதிக் கவிபாடுகிறார் கடவுளர்களை. தனையனைக் காக்கத் தந்தையை அழைக்கிறார். சேயைக் காக்கத் தாயை விளிக் கிறார். பாலாறு தேனாருகி கடவுள் வானாருகவும் பெருகி வழியும் சித்தாமிர்த்தீர்த்தத் திருநகராம் வேளூர்த்தேவனைக் காப்பாற்றுக! என்கிறார். இது எதனைக் காட்டுகிறதென்றால் "வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ" என்பதற்கிணங்க நாமெல்லாம் வாழப் பெறுதலையன்றோ !

ஐந்தாம் மாதத்திலே அலங்காரச் செங்கீரைப் பார்வையைக் காணுகிறார். சம்பாதி சடாயுவுக்கும் தவமுனிவர் எழுவர்க்கும் தண்ணளிசுரந்து, ஆனேறுயர்த்திட்ட ஐயற்கும் அம்மைக்கும் அருமருந்தாய்நின்ற மணவாள ! குழையோடு குழைபோர, குறுநகை நிலவூர, குதலைமொழி மிளிர, அருள்விழிக்கடை அருள்புரள, தோட்டிலுதைந்து, ஒருதாளூந்தி, ஒருதாள் நிமிர்த்தி, இருகையூன்றி, திருமுகம் அசைய செங்கீரையாடுக ! என்கிறார்.

எட்டாம் மாதத்தில் தொட்டிலிலிட்டு ஆட்டுகிறார் அடிகள். எவ்வாறு ? இளமாதருக்கு முதிர்வேனில் இளைப்பாற இளநீர் கொடுக்கவும், முத்துடன் கலந்துநிற்கும் பவழக் கமுகு காய்க்கவும், ஆய வளம்நிறைந்த வேளூரில் வாழ்கின்றவனே, முழுமுதலே, கதிர் வணங்கும் வேளூர் அடிகேள் ! தண்ணொளி பொங்கும் கருணாநிதியே ! சங்கத்தமிழ்த்தலைவா ! தாலேலோ ! என்று தாலாட்டுக்கூறி.

பதினொன்றாம் மாதத்திலே : குறிஞ்சித் தலைவனே, கோழி தமிழ் வேதபுரிக் குமரேசா ! நின் தண்ணளிக் கமலம் சிவப்புறவும், வேலேந்தும் வீரக்கை சிவப்பேறவும், நீ பெருவிரல் சுவைப்பதனால் உண்டாகும் தேறல்நீர் வழிந்தொழுகும் வண்கைத் தலங்கொண்டு சப்பாணி கொட்டுக ! என்கிறார்.

பதினான்காம் மாதத்திலே : அமுதூறும் வேதமும், பசுந்தமிழும், முதற்சங்கப் பாவலர் தீஞ்சுவைக் கனியும், அம்மையின் ஞானப்பாலும் உண்ட காரணத்தால் தமிழ் நாறுகின்றதும், தேனூறு கிளவிக்கு வாயூறும் செங்கனி வாயினால் கந்தபுரி முருகா முத்தம் தந்திடுக ! என்கிறார்.

பதினேழாம் மாதத்திலே : வருகைதந்து அழைக்கிறார். அப்பொழுது கூறுகிறார் அப்பிள்ளையின் அருள்விளையாட்டினை. என்னை ? அம்பிகை மடியிலே வீற்றிருக்கிறான் வேலவன். அப்பொழுது தனது செக்கச் சிவந்த சின்னஞ் சிறுகையால் அன்னையின் நீண்ட கண்ணைப் புதைக்க எண்ணி, அடங்காது, எதிர்நின்ற தந்தையின் விழிகளை (முக்கட் சிறுசுடர்) புதைக்கிறான். உலக வீட்டின் இருசுடர் விளக்குகள் இருள்பட்டு விடுகிறது. இடையிலே குழந்தை மிரளமிரள விழிக்கிறது. இவற்றைக்கண்ட அம்மையும் அப்பனும் மகிழ்ந்து கருணை

மலர்ந்து, அன்புதோய, ஆர்வமுடன் அருகணைத்து மாறிமாறி முத்தம் சொரிகிறார்கள். தன் திருமுகங்கள் ஆறாலும் மாறாத முத்தம் தருகிறான் முருகன். சடையிடையிலுள்ள கங்கை சாய்ந்த முகத்தளாய் தாவி வருகிறாள். ஏன்? முத்தம் இட இருக்காதா? அவளும் பெண்தானே. குழந்தையைக் கொஞ்ச வருகிறாள். அக்குழந்தையோ அருள்முகம் திருப்பி அலறி யோடுகிறது. இதனைக்கண்டு மகிழ்கின்றார்கள் பெற்றவர்கள். அத்தகைய அருள்விளையாட்டு விளையாடும் குமாரநாயகனே! வருக வருக! எம்மவர்க்கொரு இன்ப அருள்முத்தம் தருக! என அழைத்து அழகுறப் பாடுகிறார். இத்தகைய இயற்கை இணைப்பை எதிர்நிறுத்தி முருகனை வருகை பாடும் பேராற்றல் குமாரகுருபரர்க்கன்றி வேறு குவலயத்தோர்க்கும் உண்டோ? (இல்லை இல்லை.)

இருபதாம் மாதத்திலே: நிலா விளையாட்டுக்காட்டி மகிழ் கிறார். எவ்வாறெனின்? அமுதகிரணத்தைப் பிழிந்த சக்கை யென்றும், பெருங்கோள் உமிழ்ந்த எச்சில் என்றும், கயரோகி என்றும், ஒருநாள் பார்க்கவும் கூடாது உன்னை, என்றும் உலகம் இழித்துக் கூறுகின்ற அம்புலியே, நீயோ களங்கமுற்றாய், இம் முருகனோ கலை முழுதும் நிறைந்தவன். நீயே இரவில் திரி கின்றாய். இவனோ மண்டலம் முழுதும் எந்நேரத்திலும் யாவரும் போற்றும் முழுமதி, குறப்பெண்ணின் அல்லிமலர் அதரம் விரிய அழகுத் தாமரைக்கை குவிய, வணங்கச்செய்து உலக உயிர் தழைக்கவரும் உத்தமன். இவன் சந்நிதி அடைவோர் தீரா நோயையும் தீர்த்துவைப்பவன். இவனருள் வேண்டியார்க்கு வேண்டியாங்கு வரங்கொடுக்க வேலேந்தி மயிலூர்ந்து வரு கின்றான். இவனின் நீ மிக்கோன் என்பது எப்படிப் பொருந்தும். உலகில் மெய்கண்ட தெய்வம் இவனன்றி வேறுளவோ? உன் களங்கம் தீரக் கருணைபுரியும் கணக்கு இவனிடை இருக்கின்றது. ஆதலால் அழகு பொலிய கந்தபுரி முருகனுடன் விளையாட வருவாய் என்று விளிக்கிறார்.

அடுத்து, குறுகிக்குறுகி நடக்கும் நடையும், நிலாவின் நகையும் கண்டு, தலையிற் சுட்டி அணிந்தும், முகம் துடைத்து முத்தம் சொரிந்தும் வாசலின்புறத்து விளையாடுக என விடும் தையல்நாயகித் தாய்க்கு ஏற்ப, கிண்கிணி ஒலிக்க, தளர்நடை தாங்காக்கிளர்பூண் புதல்வராய் சிற்றிலிழைத்து விளையாடுக எனச் சிற்றிற்பருவம் கூறுகிறார்.

இன்னும் உலக மலேஎட்டும் ஒழுகும் நீர்வெள்ளம்போல் ஒளி தேக்கும் பளிக்குமாடங்கள் திகழ்கின்ற வேளூரில் வீற்றிருக்கும் முத்துக்குமரனே ! செம்பொன் போன்ற திருக்கோபுரங்கள் சூழ் திருநகரில் திருக்கோலம்கொண்ட தென்கலே, வடகலே, தலேவனுகிய குகனே சிறுபறை முழுக்குக என்றும், பால்வழியும் வதன மதலேவாய் முத்தம் பெற்று, உச்சி மோந்து, மடித்தலத்தினிலிருத்தி, பாராட்டி, சீராட்டி, கண்மணிப் பாவைகாட்டி, அப்பாலரோடும் விளேயாடுக எனப் பணித்து தம்பிரானும் எம்பிராட்டியும் விளேயாட்டுக்காணும் சேனுபதிக் கடவுளே சிறுதேருருட்டி விளேயாடுக என்றும் அருளினுர்.

இவ்வாறு சொல்கின்ற பாடல்களில், சோலேகள் நெருங்கி, இளமாதர்கட்கு வேனிற்காலத்து இளநீர் கொடுக்க, வானளாவி வளர்ந்துள்ளன தென்னேகள், முத்துடன் கலந்துதிர பவளம் போலும் காய்களே உதிர்க்கின்றன கமுகுகள். இளமையான செங்நெற் கதிர்கள் காலேக் கதிரவனேக்கண்டு பவளமுடன் கோத்தான நெல் முத்துக்களேக் காணிக்கையாக வைப்பதுபோல் தலேசாய்க்கின்றன என்று கூறுகிருர். இது வேளூரின் நீர்வள நிலவளத்தையன்ரே காட்டுகின்றது.

மேலும், சம்பாதி, சடாயு, என்ற இரு பறவைகட்கும், தவமுனிவர் ஏழுபேர்கட்கும் அருள்புரிந்து, தீராத வினே யெல்லாம் தீர்த்துவைப்பவனுகவும், தையல்நாயகி பாகனுய் விளங்குகின்ருன் வைத்தியநாதன் என்கிருர். இது அத்தலத்து மூர்த்தியின் பெருமையன்ரே.

அடுத்து, பூவிரிபுகழ்க் காவிரிபாய் சோணுட்டிலே, தனியொரு தீர்த்தமாய், மூழ்கினேர் மும்மைமலம் வேரோடும் விட்டோடவும், பழனங்களில் உள்ள கதிர்களேக் கறித்தும் ஆங்குள்ள குவளேமலர்களேத் தேட்டியும், எருமை யினங்கள் தன் மடியினின்றும் சொரியும் பாலாறு, பக்கலிலிருக்கும் தேனுருகப் பெருக்கெடுத்து, அருள் வானுருகக் கூடியதும், கய ரோகங்கள் முதலிய எங்நோயும் எம்பிரான் திருமுன்னர் இருக்கும் திருமண் கலந்த இத்தீர்த்தத்தின் திவலே ஒன்றுபட்டாலே தீரும் பெருமையுடையதும், ஆய சிறப்புப்பொருந்திய சித்தாமிர்த் தீர்த்தம் என்கிருர். இது, தீர்த்த விசேடங் கூறியதன்ரே !

இத்தகைய சிறப்பமைந்த திருப்புள்ளிருக்குவேளூரில் வாழ் வைத்தியநாதக் குமரனும் செல்வமுத்துக்குமரன் உயிர்க் குயிராய் நின்றுதவும் பெருமான், வான், பொன், மண், ஆய உலகங்கள் யாவையும் வேண்டினும் பொருளோடு அழியா வீடும் தரவல்லவன் என்று பிள்ளைத்தமிழின் பெருமை கூறுகிறார். இவரது தமிழ்ப்பற்றையும் கற்பனைத் திறனையும் காணுகின்ற பொழுது, திருக்குமரன் விளையாட்டுக்கற்பனை, தேனாறு, பாலாறு, அருளாறு என ஒன்றுகூட்டும் கற்பனை, எங்கெங்கு காணினும், தமிழ்ச்சங்கத் தலைவா, வடகலை, தென்தமிழ்க்கலை, எனக் கூறும் மொழிப்பற்று, ஆயவற்றை நினைவுகொள்ளாமல் இருக்க முடியாது. இந்த அளவில் மிடுக்கான நடையுடன், தடுக்காத இசையுடன், இலக்கண வரம்புடன், கலையுலகோர் போற்றும் கவியுடன், இயற்றிச்செல்லும் செல்வமுத்துக்குமரன் பெயரே தாங்கி நிற்கின்ற குமரகுருபரனின் கொழிதமிழ்ப் பெருமையை வாயிட்டுக்கூறுதல் ஒல்லுமோ? இந்நலம் பாராட்டும் நற்கவிதை யொன்றினை அவரடியிணைக்கீழ்ச் சாத்துகிறேன். மலரடி வாழி, மாநிலம் வாழி.

தேனிறைக்கும் தீஞ்சுவைகள் திமிரப் பில்கி
தெவிட்டாத தெள்ளுதமிழ்ப் பிள்ளைப் பாட்டை
வானிறைக்கும் வள்ளலாம் வைத்ய நாதன்
வளமகனும் எழில்முத்துக் குமரன் பேரில்
நான்மறையும் காணாத நலங்கள் யாவும்
நற்காப்புச் செங்கீரை தால்சப் பாணி
நான் முறைமுத் தம்,வருகை மிருகிச் சேர்ந்த
நுவன்றிடும்அம் புலிபறைதேர் சிற்றில் சேர்த்து,

அள்ளியெடுத் தகிலங்கள் அழகு பேச
அமுதமொழி அலங்கார அணியுங் கூட்டிப்
பிள்ளைமுறைத் தமிழ்க்கரும்பின் பிழிவைத் தெய்வப்
பெற்றிமையும் கற்றிடவே நாட்டி நின்று
வெள்ளம்போல் தமிழரினம் மேவ மேவும்
மெய்க்குமர குருபரனின் மேன்மை போற்றி !
புள்ளிருக்கு வேளூரின் புனிதன் தன்னைப்
புன்மொழியாம் என்மொழியாற் போற்றினேனே.

அன்பின் வெற்றி

செஞ்சொற்கொண்டல் - வித்துவான், திரு. சொ. சிங்காரவேலனர்,
தமிழ்ப்பேராசிரியர், ஆதீனப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

(மலர் 18, இதழ் 2, பக்கம் 106 இன் தொடர்ச்சி)

நான்காம் படலம்

தீமையின் விளக்கம்

வழக்கறிஞர் ; மன்ருடி வழக்கை வெல்லும்
வழக்குடையார் ; நாள்தோறும் கதிரோன் தோன்றல்
கிழக்கில்லை மேற்கென்று வாத மிட்டுக்
கீழவரும் எண்ணிடச்செய் திறமையுள்ளார் ;
கிழக்குமரன், தங்கைமகள் இருவர் தம்முட்
கிளர்ந்தெழுந்த உரைகேட்டார் ; கிளர்ந்தார் நெஞ்சு !
உழக்கினிலே பூசலென்ருல் உளம் உவக்கும்
ஒருபண்பின் உத்தமர்தாம் அவரே யன்ருே ? 36

தங்கைப்பெண் வாழ்கின்ற இல்லம் அந்தத்
தையலா ளுக்குரிய தோட்டம் எல்லாம்
தன்கைக்கு வரவேண்டு மென்றே யன்ருே
தமையனிங்கு நினைத்திடுவான் ! அம்மட்டோதான் ?
செங்கரும்புச் சொல்லரசி சிரிக்கும் முல்லை
செந்தேனைத் தெளிக்கின்ற நிலவு ; ஓங்கும்
தெங்கிளநீர்க் குளிர்விழியாள் ; தேமாங் கொம்பு ;
தேர்தமிழாம் பான்மொழியாள் மருங்கு கொண்ட 37

காதலினல் கிழவனுளங் கவலு மன்ருே ?
கடும்புலிபோல் நெஞ்சுடையான் கனல்வானன்ருே ?
ஆதலினல் வழக்காட நினைப்பான் ; நம்மை
அடுத்தன்னன் தொடுத்திடவிங் கடைதல் கூடும் ;
வேதனைசேர் குடும்பத்தே விளைந்த பூசல்
வேட்டைநமக் "கென்றந்த வழக்குரைஞர்
சாதனையைப் பொருள்வரவை நினைத்திருந்த
சமயத்தே, குமரனங்கு வந்தடைந்தான் ! 38

வரவேற்ருர் வழக்கறிஞர் ; எழுந்து நின்று
வலிதாகச் சிரிப்பொன்றை உதட்டோரத்தே
வரவிட்டுக் கரங்கூப்பி நெஞ்சந் தன்னை
வயிற்றுப்பாட் டெழுதுகின்ற திரையைப் போட்டு
கரவிட்டுக் களிப்பாராய், "வாரும் வாரும் !
காணேமே பலநாளாய் ?" என்றிசைத்தார் ;
அரவிட்ட கொடுமனத்தான் "ஆமாம் ஐயா,
அழைக்கவில்லை சிறுபூசல்" எனஉட் கார்ந்தான் ! 39

"உடன்பிறந்தாள் பெற்றமகள் ; உள்ளூர்ப் பள்ளி
உற்றங்கே ஆசிரியைப் பணிசெய் கிற்பாள் !
கடனன்ரே மாமன்மனம் கோண தந்தக்
கன்னிமணம் துன்னிடுதல் ! அதை மறந்தாள் !
மடனுடையாள் ; மறுக்கின்ருள் ; பெற்ற அன்னை —
மனநிலையை எதிர்க்கின்ருள் ! ஐயா இந்த
திடனில்லார் தமைச்சாய்க்கும் திறமே நாடித்
திருமுன்னர் வந்தேன்யான்" எனப்புகன்ருன் ! 40

"செவ்வல்லி மதிக்கன்ரே உரிமை ! இந்தச்
சேகமறிந்த உண்மையிது ! மறுத்த லாமோ ?
ஒவ்வாதால் ; உம்மழகும் பண்பும் கண்டும்
உரைத்தனளோ எதிர்மொழிதான் ! வெட்கம் ; வெட்கம் ;
சவ்வாது நறுமணத்தை வெறுப்பா ருண்டோ ?
சரியன்று ; என்சொன்னீர் ? எதிர்த்தா நின்ருள் ?
எவ்வாறு பொறுத்தீரோ ? என்ருர் ; "ஆமாம் ;
ஏசிவிட்டாள் ; கூசிவிட்டேன்" என்ருன் தீயோன் ! 41

"தொடுத்திடுவீர், வழக்கொன்று ; மதிப்பு மிக்குத்
துலங்குமெனை இகழ்ந்துவிட்டாள் ; மானக் கேடு
அடுத்ததென்று" வழக்கறிஞர் உரையாம் எண்ணெய்
அவன்மனத்துச் சூழ்ச்சியெனும் அழலைத் தூண்ட,
மடுத்தபெருங் களிவெறிய ஞகி யன்னுன்
மகிழ்வோடு "பெரியீர்அவ் வாறே செய்வோம் ;
கெடுத்திடலாம் ; மன்னிப்புக் கேட்கச் செய்வோம்,
கேசெடுப்பீர் ; காசெடுப்பேன்" என்றுரைத்தான் ! 42

தற்காலத் தறங்கூறும் அவையஞ் செல்வோர்
தண்மைநிகழ் தின்பண்டம் தன்னைக் கண்டு
பொற்பான பொறியுள்ளே புகுந்து வாடும்
பொறியற்ற எலியொப்பார் ; மீள்வதில்லை !

கற்காத டோய்ம்மையேலாங் கற்றுப் பன்னுள்
கவலையேனுங் குழிவீழ்ந்து செல்வங் கேட்டு
நற்காலம் இல்லையேன இறுதிநாளில்
நலிவுறுவார் ; போலிவிழப்பார் உண்மை யீதே! 43

'' கோல்லையிலே வேலிதன்னைத் தள்ளிப் போடு!
குறுக்கிவிடு எல்லைதனை ; இல்லை யேன்றால்
எல்லையிலே அறமன்றந் தன்னில் வந்தே
எடுத்துச்சேல் '' என்றண்டை வீட்டுள் ளானைத்
தோல்லையிலே தள்ளிப்பின் தாமும் வீழ்ந்து
தோலைத்துவிட்டுப் போருள்தம்மைத் துயரங் கோண்டு
அல்லலிலே வாழ்வோரிங் கதிகம் பேராம் ;
அந்தோ வீண் பூசலினால் கேடுகின்றாரே. 44

'' தங்கைமகள் தனையானும் மணக்க வேண்டும் ;
தங்கையினைத் திருத்தவழி பிறக்க வேண்டும் ;
தங்கைநிலம் தோட்டமேலாம் எனக்கே வேண்டும் ;
தட்டியுரைத் திடுவாரை யடக்க வேண்டும் ;
அங்கவர்தங் கோட்டமேலா மடங்க வேண்டும் ;
அவலவிசை தனைப்பாடி வருந்த வேண்டும் ;
இங்கிவற்றை இயற்றவழி யியம்ப வேண்டும் ;
எடுத்துரைப்பீர் '' எனமோழியை அடுக்கி நின்றான்! 45

சிந்தித்தார் வழக்கறிஞர் ; நேற்றி மேலே
சிற்றலைகள் உற்றேழும்பக் கனைத்து நின்று
முந்தித்தம் வயிற்றையோரு கையினாலே
முறையாகத் தடவிவிட்டு உரைக்கலானார் ;
'' நிந்தித்தோர் தமைச்சாய்க்கும் வழியும் ஈதாம் ;
நீயிவண்வா '' என்றழைத்துச் சேவியினூடு
வந்தித்தோன் தான்வாழ வழியும் சோன்னார் ;
வரம்பில்லா மகிழ்வுற்றான் ; '' அடடா! '' என்றான்! 46

'' உள்ளத்தே உவகையேன்ற பாலை வார்த்தீர்!
உதவாதோர் தமைவீழ்த்திக் குழியும் தூர்த்தீர்!
கள்ளத்தே மோழிகூறும் கன்னி தன்னைக்
கைப்பிடிப்பேன், கைப்புடைய மோழியால் என்னை
வேள்ளத்தே தள்ளிவிட்ட அன்னார் என்பால்
விரைந்திடுதற் கிதுவன்றோ நல்ல பாதை!
வள்ளத்துப் பூந்தேனில் வாய்வைத் தேனால் ;
வழிவகுத்தீர்! வாழி '' யேனக் கவியிசைத்தான்! 47

'கிழவனுக்குக் குமரிதனைக் கேடுக்க நேஞ்சில்
கிளுகிளுப்பு இத்துணையா என 'த்தா மேண்ணி
வழவழத்த முன்தலையை விரலால் நீவி
வாய்நிரம்பச் சிரிப்போடு வார்த்தை சோன்னர்
வழக்கறிஞர், " அடடேவீண் புகழ்ச்சி வேண்டா ;
வாய்வார்த்தை வாழ்வுக்குத் துணையும் ஆமோ ?
இழக்கின்ருர் இன்பமேலாம் ; உறுதி ; எங்கே,
எடுத்திடுவீர் பணப்பையை என்றுரைத்தார் ! 48

தாதிமனம் நீர்க்குடத்தே என்ற வார்த்தை
தமிழினிலே இருப்பதுமேய் என்றே யேண்ணி
மேதினியில் புகழ்மிக்க அன்னருக்கு
மிகுபோருளை எடுத்தளித்து எழுந்து போற்றி
வாதிநடங் தானவன்றன் புறத் தோற்றத்தை
வழக்கறிஞர் பார்த்தபடி நின்ருர் ; இந்த
தீதினவர் தம்மாலே அழகும் அன்பும்
திறங்கேடுமோ என்றுமனம் பதைக்கு மன்ரே ? 49

இராகம் - சிம்மேந்திரமத்திமம் **தாளம் - ஆதி**

பல்லவி

இன்பம் தந்தாலுனை நினைந்திடே னேன்று
துன்பம் தந்தாலும் துணையே—காவாய் (இன்பம்)

அனுபல்லவி

நன்மதி நீங்கி நலிந்திடச் சேய்யும்
போன்னும் போருளும் பூமியும் ஆகவே (இன்பம்)

சரணம்

கல்வியும் கவினுர் திறமும் அழகும்
மேல்லவே பேற்ருல் உனைமறந் திடலாகும்
நல்லவை யேல்லாம் என்றும் நாடிடும்
புல்லிய சித்தனைப் புரப்பதற் கேன்றே. (இன்பம்)

T. B. SIDDALINGAIAH,
Tamil News Unit, All India Radio, New Delhi.

தருமபுர ஆதீனம், சென்னை
சமயப் பிரசார நிலயத்தில் புராணங்கள் குறித்து

சென்னைமாநில அறநிலைய, அமைச்சர், '' நல்லறங்காவலர் ''

கனம். திரு. M. பக்தவத்சலம் B.A., B.L., அவர்கள்

புராணம் என்றாலே மிரள்கிறார்கள். கருத்து மாற்றம் கொள்கிறார்கள். பொய் நிறைந்தது என்று தவறாகக் கொள் கிறார்கள். இம்மாதிரி நல்ல விஷயங்களைப்பற்றிக் கூறும் புராணங்களைப்பற்றித் தப்பெண்ணம் கொள்கிறார்கள். நல்ல வற்றைத் தப்பாக எண்ணினால் நாம் தவறான பாதையில் போகிறோம். அதனால் நமக்குத்தான் நஷ்டம். புராணந்தான் இப்படி என்றால் இறைவனைப் பற்றிய பாமாலை என்றாலே வெறுப்புக்கொள்கிறார்கள் ஒரு கூட்டத்தார். அவர்கள் ஒருபுற மிருக்கட்டும். சமயக்கொள்கை உடையவர்களும் தத்துவம் புரியாத காரணத்தால் புராணங்கள் மீது தப்பெண்ணம் கொள் கின்றனர். ஒரு விஷயத்தைச் சொல்லும்போது நகைச்சுவை யைக் கையாளவேண்டும். ஆற்றலுடையவர்கள் கையாண்டால் நகைச்சுவை சிறப்படைகிறது. ஆற்றலில்லாதவர்கள் கையாண் டால் நகைச்சுவை ஆபாசமடைகிறது. புராணங்களில் சிறந்த முறையில் சொல்லப்பட்ட விஷயங்களை நகைச்சுவையோடு சொன்னால் மக்கள் உள்ளம் விரைந்து ஏற்கும். எனவேதான் தத்துவ நிலையை இணைத்து முன்னோர்கள் புராணவாயிலாக, பெரிய உண்மைகளை விளக்கியுள்ளார்கள். திருவிளையாடற் புராணம் ஒப்புயர்வற்ற கவிதைகளை உடையது. இதன் வாயிலாக நல்ல அறவுணர்வை நாம்பெறலாம். புராணங்கள் நமது சிறந்த போக்கிஷங்களாக விளங்குகின்றன. இது நமக்குப் பெருமையை அளிக்கக்கூடியது. போக்கிஷங்கள் இருக்கின்றன வென்று பெருமை கொண்டால் மட்டும் போதாது. இதுபோன்ற புராணங்களைப் படித்தும் கேட்டும் வாழ்க்கையில் பயன்படுத்த வேண்டும். அதுதான் நாம் செய்யவேண்டியது. மக்கள் வாழ்விற்குப் பயன்படும்படி தருமபுர ஆதீனம் இப்பிரசார நிலயத்தின் மூலம் பக்திவளர்ச்சிக்கு மக்களிடையே சிறந்த சேவை செய்கிறது. சைவசித்தாந்த சாத்திரத்தை மக்கள் உணருமாறு தக்க முறையில் போதித்து வருகிறது. இம்மாதிரி தொடர்ந்து விரிவுரைகளை உதவவேண்டும். மக்கள் இவற்றைப் பயன் படுத்திக்கொள்ளவேண்டும்.

தேவார – திருவாசக அருட்பாடல்கள் குறித்து

வங்கப் பேரறிஞர்,

திரு. சுனீத்குமார் சாட்டர்ஜி அவர்கள்

“ தேவார - திருவாசகப் பண்களும், ஆழ்வார்களின் பாசுரங்களும் ஓதுவார்க்கும் கேட்போருக்கும் ஆன்மீக அமைதியையும், ஆனந்தத்தையும் அளிக்கவல்லன. இத்தகைய அருட்பாடல்களை வேறு எம்மொழியிலுமே காணமுடியாது.”

என்னுடைய தமிழ்க் காதல் என் இளமைப்பருவம் தொட்டே வளர்ந்ததொன்று. நான் சிறுபையனாக இருந்தபோது, படாபஜார் பிராந்தியத்திலே குடியேறியிருந்த தமிழகத்தைச் சேர்ந்த வணிகப் பெருமக்கள் தமிழ்மொழியில் ஒருவருக்கொருவர் பேசுவதைக் கூர்ந்து கேட்டுக்கொண்டேயிருப்பது உண்டு. ஆண்டுக்கொருமுறை அவர்கள் சுப்பிரமணியசுவாமி விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடுவது உண்டு. அப்போது சுப்பிரமணியசுவாமி வீதி உலாவருவதற்கு ஏற்பாடு செய்வர். சுவாமி உலாவரும்போது சுவாமிக்குப் பின்னால் இசையோடு தேவாரம், திருவாசகம் ஆகியவைகளைப் பாடிவருவார்கள். அதைக்கேட்டு மெய்மறந்து அவர்கள் கூடவே நானும் செல்வதுண்டு. அவர்கள் பாடிய பாட்டிலுள்ள அடிகளில் “திருப்பெருந்துறை உறை சிவனே” என்ற வரி என் உள்ளத்திலே பதிந்துவிட்டது. அப்போது முதலே தமிழைக் கற்கவேண்டும், தமிழ் நூல்களைப் படிக்கவேண்டும் என்ற ஆர்வமும் காதலும் எனக்குத் தோன்றிவிட்டன. பின்னர் நான் மொழி ஆராய்ச்சி மாணவனாக இருந்தபோது, பல மொழிகளைக் கற்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததை நன்கு பயன்படுத்திக்கொண்டு சிறிது சிறிதாகத் தமிழைக் கற்கத் தொடங்கினேன். பேரறிஞர் ஜி. யூ. போப்பின் “தமிழ் இலக்கிய வரலாறு” “திருக்குறள்” “நாலடியார்” “திருவாசகம்” ஆகிய இவை எனக்கு மிகவும் துணை புரிந்தன. திரு. வி. கனகசபை பிள்ளையின் “1800 ஆண்டுகளுக்கு முன்னைய தமிழர்கள்” என்ற நூலும் எனக்கு மிகவும் உதவியாக இருந்தது. சங்க இலக்கியம், ஆழ்வார்கள், நாயன்மார்கள். பாசுரங்கள், திருவாசகம், திருமந்திரம் ஆகியவைகளில் என் உள்ளத்தைப் பறிகொடுத்தேன். மற்றைய பண்டை இலக்கியத்தில் நான் பெறாத அமைதியையும் ஆனந்தத்தையும் இந் நூல்கள் மூலம் பெற்று மகிழ்ந்தேன்.

சவுந்தரியந்தாதி

பவளக்கொடி அடிகள் அருளிச்செய்தது.

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

பொன்னிதழ் பரந்தமலர் கொன்றைமுடி யின்சடிலர்
போதசுக போக மயிலே
வன்னியி லெழுந்தவொளி மின்னலென நுண்ணிடை
வளைந்திலகு வஞ்சி மணியே
யுன்னரிய ஞானவொளி யேவெளியின் மேவுமொரு
வொதிம நலங்கொ ளுமையே
யென்னரிய தந்தையை யெழுந்தருள்க வென்றரு
ளிரங்கினிய ரம்பை யரசே. 1

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

அரசர் தம்பிரா னுழிமால்
பங்கய னக்கினி நுதற்கண்ணன்
சிரசு பூண்டருள் சேவடிக்
கமலத்தின் செல்வியே சேணார்ந்த
வரையி லேபிறந் தருளிய
மனோன்மணி மகேசுவரி மதிசூடி
யுரையு ணர்ச்சியு மிறந்தவர்க்
கருளிய வொளிவிளக் கனையாளே. 2

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

ஆளு மையனை நாளு மம்பல
மாடி டும்படி நாடியே
கொளு றுஞ்சிவ ஞான ரஞ்சித
கோகி லம்பயில் வாகினி
தாளு றம்புய மேல மர்ந்திடு
தார கம்புகன் ஞானமே
தோளு றுங்கழை யார்ப சுங்கிளி
தோகையம்பிகை பாகமே. 3

பாகங் கலந்தமணி யாகஞ் சிவந்தமுழு
நீறுந் துலங்கு பரமன்
ருகங் தவிர்ந்தவித மூறுஞ் சலம்புளக
சாரஞ் சோரிந்த குயிலே
போகஞ் சிறந்ததனி யோகந் தேளிந்தவர்கள்
போதந் தேரிந்த வீழியே
மேகம் புகுந்தகுழன் மாதங் கியேங்கள்சிர
மேவுஞ் சேழுங் கமலையே. 4

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

கமலக் கண்ண ஞன்முக
ஞடிக் கதரிக் காஞரைத்
தமதுட் பாகம தாகத்
தவமுயல் சதுரித் தாய்மாதே
யேமதுட் பாதச ரோருகம்
வைத்தினி யாளாய் கோமாதே
யமலித் தூளணி யாரணி
பூரணி யருளுற் ருள்வாயே. 5

வாயா ரச்சோலி வீழ்வா
ரைப்பதம் வாழ்வா யப்பாவேன்
ரேயா நித்திய ஞாஞ
சத்தியு ஞர்வாழ் விப்பாயே
சேயாய் வைத்தேனே யாளா
யுத்தமி சீர்பா தத்தேனே
நீயா ரப்புரி நாயே
னேச்சிவ னேரே யுற்ருளே. 6

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

உத்தமி பத்தினி சற்குணி நித்திய
வோப்பி லருட்கோடி யோதாதே
பித்த னேனப்புவி யுற்றம யக்குறு
பிச்சை யோழித்தருண் மாதாவே
நித்தனே யத்தனே மூத்தனே நத்திய
நிட்டைய ளித்தரு ணீமாதே
சித்தினி பத்மினி யத்தினி சங்கினீ
சீற்றடி யிட்டரூண் மாஞரே. 7

கடிதம் :

R. Kandaswamy Mooppanar, B. A., B. L.,

Kumbakonam,
16—3—'59.

Dear Sir,

Please convey my obeisance to His Holiness Srimath Thambiran Swamigal Avl., I got this morning the invitation for the function arranged for the celebration of the successful completion of Kandapuranam lectures and the inauguration of the Tiruvilayadal function on Sunday the 15th instant.

Madras is a suitable place for arranging lectures on holidays where it is customery for the devotees assembled to hear and benefit by such lectures which are usually termed as 'Kalakshapam'. Our eminent Head of the Mutt has chosen most learned persons to deliver lectures in an able way on the best treatise devoted to the worship of Lord and has succeeded in getting for the functions the Minister in charge of Hindu religious and charitable Endowment Board and a High Court Judge who can really appreciate the devoted service of the Mutt in the cause of religion. The function would have gone on happily and several devotees would have attended the same. I wish to convey through you my sincere admiration of His Holiness for his noble service to the cause of "SAIVISAM"

Yours Sincerely,

R. KANDASWAMY.

மூக்கனூர்
15—3—59

வணக்கம் பல,

நமது தருமபுர ஆதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்தியனாதசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ செல்வமுத்துக் குமரஸ்வாமிக்குப் புதிதாகச் செய்யப்பெறும் நவரத்தின கவசம் குழந்தை செல்வமுத்துக்குமரனுக்கு என்ன அழகு மிளிர்கிறது. இம்மாதிரி குமரனுக்கு நவரத்ந கவசம் செய்து வைக்கும் திருப்பணிக்கு நமது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களது உள்ளம் கனிந்த அன்புக்கு என்னதான் ஈடுசெய்வது? முத்துக் குமரனுக்கு நவரத்ந கவசம் பூர்த்தி செய்து கவசத்தை குழந்தை முத்துக்குமர சுவாமிக்கு அணிவித்து குழந்தையை தாயார் உமயவளிடம் இந்தாங்க உங்கள் குழந்தை என்று ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் கொடுத்தால் உமையம்மை தன்குழந்தையை வாங்கி தன் மடியின்மேல் உட்கார்த்தி சாஞ்சாடம்மா சாஞ்சாடு, சாயக்கிளியே சாஞ்சாடு மரகதமணியே சாஞ்சாடு அம்பிலி மானே சாஞ்சாடு என்று தன்குழந்தையைச் சீராட்டித், தாலாட்டி சதிபதிகள் உள்ளம் மகிழ்வார்களன்றோ? இந்த மகிழ்ச்சியில் கணபதி மனம் கொஞ்சம் ஏமாற்றமடையலாம். ஆனால், அவரோ முத்துக்குமரனை ஏமாற்றி மாங்கனி முழுதும் தின்றவரன்றோ? அந்த சினத்தை மகிழ்விக்க இத்திருப்பணி யன்றோ? இம்மகிழ்ச்சி மக்களின் உள்ளத்திற்கு உள்ளம் கொண்ட கர்ப்பனைச் செல்வமாகும். இம்மாதிரி நம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் செய்யும் உன்னத திருப்பணிக்கு நமது இந்தியநாடு மங்களநாடாக ஈசன் உமையும் அருள்புரிவாராக.

M. V. கந்தஸாமி அய்யர்,
மிராஸ்தார்.

பன்னெறி விளக்கம்

களமூர், பெருநாவலர், திரு. செ. செல்வப்ப முதலியார் பாடியது.

மாற்றமில் லாதவர் நோற்றிடு மாதவர் மாய்க்கவரூங்
கூற்றமில் லாதவர் யீற்றையெய் தாதவர் குற்றமுற்ற
சீற்றமில் லாதவர் தோற்றமில் லாதவர் தேற்றமிகும்
ஏற்றமில் லாதவர் நாற்றப் புலாலுண்ணு மீனர்களே. 50

ஆலயங்களும் உற்சவங்களும் பற்றி

சென்னை மேல்சபை உறுப்பினர்,

திரு. T. புருஷோத்தமன் M. L. C. அவர்கள்

ஆலயங்கள் பக்தியைப் புகட்டும் ஆசிரியர்களைப்போல் சமுதாய மக்களுக்கு ஆலயங்களிலிருந்து ஆண்டவன் அருள் பாலிக்கிருர். பழைய காலத்தில் ஆலயங்கள், கல்வி ஸ்தாபனங்கள் புரியும் பணியைச் சொல்ல வந்திருக்கின்றன. ஆலய சுவர்களில் எழுத்துக்கள் பொறிக்கப் பெற்றுள்ளன. மத, சமூக காரியங்களுக்கு மட்டும் அன்றி கோவில்கள் கல்வித் துறையிலும் விசேஷ முக்கியம் பெற்று விளங்குபவை. மத சம்பந்தமில்லாத கல்வி வெற்றிபெற முடியாது. நமது கவி நாமக்கல் ராமலிங்கம் பிள்ளையும் இந்தக் கருத்தையே சட்ட சபையில் வெளியிட்டார். ஆனுல் சர்க்கார் இத்தகைய சீர்திருத்தத்தைக் கல்வி முறையில் அமுலாக்குவதில் அக்கறை காட்டவில்லை.

பண்டைக்கால சீறிய சின்னங்களைப் பாதுகாக்கவேண்டும். கலைச் சின்னங்களைச் சேகரிப்பவர்கள் இவற்றை வைத்துக் கொண்டு வியாபாரம் செய்வதாயும், இந்தியக்கலையின் உன்னத மான அம்சங்கள் விற்கப்படுவதாயும், அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இவை நிறுத்தப்படவேண்டும். பிரும்மோற்சவங்கள் மக்களின் பக்தி வாழ்வை மங்காமல் மலரச் செய்பவை. தருமை ஆதீனம் இப் பிரும்மோற்சவத்தை மத பக்தீச் சூழ்நிலையில் நடத்துகிறது. இதர காரியங்களுக்குக் கோவில் பணத்தைப் பயன்படுத்தச் சர்க்கார் நினைப்பது வருந்தத்தக்கது. அத்தகைய முயற்சியைத் தீவிரமாகக் கண்டிக்க வேண்டும்.

பன்னெறி விளக்கம்

களமூர், பெருநாவலர், திரு. செ. செல்வப்ப முதலியார் பாடியது.

தாக்கப் பொறுத்தவர் வைதும் பொறுப்பர் தலைவெட்டவா
டுக்கப் பொறுத்தவர் முற்றும் பொறுப்பர் நற்சோற்றையில்லி
லாக்கப் பொறுத்தவ ராறப் பொறுப்பரில்லாள் பிறனை
வேட்கப் பொறுத்தவர் மெய்யும் பொறுப்பர் விளங்கிழையே.51

கோயில்

மலர் என்றால் தாமரை மலரைக் குறிக்கும். சாத்திரம் என்றால் சைவசித்தாந்தத்தைக் குறிக்கும். கோயில் என்றால் சிதாகாச வெளியில் திருநடமியற்றி உலக இயக்கத்திற்கு மூல காரணராகப் பஞ்சகிருத்திய பரமானந்த தாண்டவராய் விளங்கும் ஸ்ரீ ஆனந்தநடராசப்பெருமான் எழுந்தருளியுள்ள தில்லைச் சிற்றம்பலத்தைக்குறிக்கும். அதுபோல வைஷ்ணவர்களுக்கு மலை என்றால் வேங்கடம், பெருமாள் என்றால் காஞ்சி வரதராசப் பெருமாள், கோயில் என்றால் திருவரங்கத்துப் பெரியகோயில்.

மக்களுடைய உடலே கோயில். உள்ளமே இறைவனின் உறைவிடம். கோயிலைப் பாதுகாப்பதற்கு நம் உடலைப் பாதுகாப்பதில் உள்ள முயற்சிவேண்டும். கோயில்களுக்கு ஏற்படும் ஊறு நம் உடலுக்கேற்படுவதுபோல. அண்மையில் திருவரங்கத்தில் ஏற்பட்ட நிகழ்ச்சி எல்லோர் உள்ளத்திலும் ஒரு பரபரப்பை விளைத்து விட்டிருக்கிறது.

இன்னல் விளையும் பொழுதெல்லாம் அடியவர்கள் தளரா உறுதியோடு இதுவும் ஒரு சோதனை என எண்ணி வந்தார்கள். மலையே வந்து விழினும் மனங்கலங்காத உள்ள உறுதியும், அஞ்சுவது யாதொன்றுமில்லை என்ற மனத்திண்மையும் அப்பரடிகளுக்கு இருந்தது. இன்பத் துன்பங்களை ஒன்றாக எண்ணும் உளப்பாங்கு அடியவர்களுக்கு இருந்து வந்திருக்கிறது. இக்காலங்களில் தெய்வ உணர்ச்சி உள்ளத்தில் அரும்பிட்டு மலர்தல் வேண்டும். கடவுட்பற்று மேலோங்கவேண்டும். எல்லோரும் ஒன்றாய்க் கடவுளைப் பிரார்த்தனை புரிதல்வேண்டும். கடவுள் திருவடிகளையே பற்றுக்கோடாகப் பிடித்துக்கொள்ளுதல் வேண்டும். மணிவாசகர்தம் பண்சுமந்த பாடலுக்கு இறைவன் மண்சுமந்தான். பாண்டியன் கையால் பிரம்படி பட்டான். அந்த அடி எல்லோர் முதுகிலும் பட்டது. இன்று அரவணைத் துயிலும் பெருமான்கோயிலில் ஏற்பட்ட செயல் எல்லோர் உள்ளத்தையும் சென்று தொட்டிருக்கிறது.

சைவர்கள் நாடோறும் செய்துவரும் சிவபூசையில் மகா விஷ்ணு சப்த குருக்களில் ஒருவராய் வந்து அருள்புரிகிறார். சதாசிவகுரு, அநந்தகுரு, ஸ்ரீகண்டகுரு, அம்பிகாகுரு, ஸ்கந்த குரு, விஷ்ணுகுரு, பிரம்மகுரு என்ற சப்த குருமார்களை

வழிபாடு செய்தே சிவபெருமானை வழிபடுவது சைவமரபு. ஆருதார தியானத்தில் மணிபூரகத்தில் மகாவிஷ்ணுவையே தியானிக்கின்றோம். அப்பரடிகள் 'மாலாகி நான்முகனாய்' என்றும், 'நாரணன் காண் நான்முகன் காண்' என்றும் நம் பெருமானை அழைத்தருள்கின்றார்கள்.

திருவரங்கம் பழங்காலத்திலிருந்தே புகழ்பெற்று விளங்கி வரும் திருக்கோயில். இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் இங்குள்ள திருமாலின் கிடந்த திருக்கோலத்தை வர்ணிக்கிறார். ஆழ்வார்களும், பாவலர்களும் இப்பெருமானைப் பாடிப்பரவிய பாமாலைகள் எண்ணற்றவை. தமிழ் நாட்டின் தெய்வக்கலைச் செல்வங்களைக்காண வருவோர்க்குப் பெருவிருந்தாயிருந்துவரு வது இத்திருக்கோயில். உற்சவராக விளங்கும் திருவரங்கநாதர் விபீஷணன் பூசித்த மூர்த்தி என்று சொல்லப்பெறுகிறது.

திருவரங்கத்துப் பெருமான் தென்முகநோக்கி மேற்கில் திருமுடி வைத்துப் பள்ளிகொண்டுள்ளார். இடது கைப்புறம் பிரியாவிடையாகிய பூதிசக்தியும் வலதுகைப்புறம் கிரியாசக்தி யும் விளங்குகின்றனர். பூதிசக்தி மகாப்பிரளயகாலத்து பெருமா னுக்குள் ஒடுங்கிப் பின் புனருற்பவகாலத்தில் அருளால் வெளிப் படுபவள் கிரியாசக்தி உலக இயக்கத்துக்குக் காரணமான சக்தி. இது சுதர்சனசக்ரமாக அமைந்திருக்கிறது. இவ்வமைப்பு ஸ்ரீரங்கம் கோயிலிலமைந்த தனிச்சிறப்பு என்று சொல்கிறார்கள். பூதிசக்தி அருட்சக்தி. அவள் கருணையின் ஒரு கூற்றால் கிரியா சக்தி இயங்குகிறது. கிரியாசக்தியாகிய சக்கரத்தாழ்வாரையும் பெருமானையும் அருட்சக்தியாகிய பூதிசக்தியையும் வழிபட்டால் பூர்ண அநுக்ரகம் கிடைக்கும் என்ற முறை இக்கோயிலில் வழக்கில் இருக்கிறது.

திருவரங்கம் என்பது பஞ்ச அரங்கங்களுள் சிறந்தது. சைவர்களுக்கு பஞ்ச சபைகள் இருத்தல்போல வைணவர் களுக்கு இந்த ஐந்து அரங்கங்களும் சிறந்து விளங்குவன. பீடத்தாலும் இது மகிமை மிக்கது. சேஷபீடம் (ஆதிசேஷ சயனம்). ஆதியில் பிரமனுக்கு ஸ்ரீரங்கவிமானத்தில் எழுந்தருளி நாராயணர் காட்சி அளித்ததாகவும் அந்த ஸ்ரீரங்க விமானத் திருக்கோலத்தை வழிவழியே பலரும் பெற்று வழிபட்டுவந்து இக்ஷுவாகு குலத்தரசர்கள் வழிபட்டுவந்ததாகவும் இராம பட்டா பிஷேகம் முடிந்தவுடன் விபீஷணருக்குக் காட்சி அளித்து

"நாம் இங்கேயே எழுந்தருளியிருந்து அருள்வழங்கி இருப்போம் ; நம்முடைய கடாட்சவீட்சண்யம் உமது இலங்கைக்குமுண்டு. ஆகையால் மனம் வருந்தாதே ! ஏகும்" என்று அருளிச் செய்ததாகவும் புராண வரலாறு.

தேசம் தேவாலயங்கள் இரண்டும் ஒன்ருேடு ஒன்று இயைபுடையன. தேவாலயங்களுக்கு ஏதேனும் குறை ஏற்படின் தேசத்துக்கு ஏற்பட்டதாகும். இதனைத் தருமையாதீன முதற் பெருங்குரவர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் அறிவித்தருள்கிருர்கள். திருமூலரும் இதைக் கூறியருளுகின்ருர். தருமையாதீனம் இருபத்தைந்தாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் இந்தச் செய்தி தெரிந்தவுடன் திருவரங்கத்தில் மூலவர் திருமேனித் திருப்பணிக்கு என்று ரூ. 3500 அளித்தருளியுள்ளார்கள்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் 8—4—59 புதன் கிழமையன்று திருவரங்கத்திற்கு எழுந்தருளினுர்கள். சாந்திரமான முறைப்படி சித்திரைமாத வளர்பிறை ரேவதி அன்று பெருமான் ஸ்ரீரங்கநாதர் பிரதிஷ்டையானநாள். இந்நாள் ஆண்டு தோறும் கொண்டாடப்படுகிறது. அதனை ஒட்டி ஆண்டுக்கு ஒரு முறை நடைபெறும் மிகச் சிறப்பான சம்வத்சராபிஷேகம் அன்று. இது ஒரு எதிர்பாராதத் திருவருள் வாய்ப்பு. திருக்கோயில் நிர்வாக அதிகாரி திரு. K. K. மேனன் அவர்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களை மிக்க அன்போடும் பெருமையோடும் வரவேற்ருர்கள். திரு. மேனன் அவர்கள் பக்தியும் பண்பாடும் உள்ளவர். பெருமானிடத்து மிக்க ஈடுபாடுடையவர். மூலவர் கர்ப்பக்கிரகத்தில் நடந்த செயலை அவர் விஸ்தரிக்கும்போது மனம் உருகிக் கூறியது அவருக்கு பெருமானிடம் இருக்கும் அளவு கடந்த பக்தியைக் காட்டுகிறது.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களை நிர்வாக அதிகாரிகளும் மற்றும் பல பட்டாச்சாரியார்களும் உள்ளே அழைத்துச் சென்ருர்கள். குருமகாசந்நிதானம் அவர்கள் அங்கே நடந்த நிகழ்ச்சிகளையெல்லாம் கண்டு மனம் உருகி "ஈசன் பலஹீனன் என்றக்கால் ஆலயத்தில் மோசம் வந்ததென்று மொழியலாம் ஈசனே ஆக்குவதும் ஆக்கி அழிப்பதுவும் தானுனல் நோக்குவதேன் யாம் பிறரைநொந்து" என்ற ஸ்ரீ குருஞானசம்பந்த

சுவாமிகளின் திருவாக்கை எல்லோருக்கும் ஆறுதலாகக் கூறி யருளினூர்கள்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் உபயநாச்சியாரோடு கூடிய ஸ்ரீரங்கநாதரை பொன்னுடை அணிவித்து சேவித்தார்கள். திருப்பணி வேலையில் ஈடுபட்டுள்ளவர்களை உற்சாகப்படுத்தினூர் கள். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் அங்கிருந்து தருமபுர ஆதீனத்திற்குச் சொந்தமான உய்யக்கொண்டான் என்னும் கற்குடித் திருமலைக்கோயில் சென்று தரிசித்து அன்று இரவு தருமைக்கு எழுந்தருளினூர்கள்.

அமைச்சர் கனம். திரு. K. காமராசர் அவர்களும், கனம். திரு. M. பக்தவத்சலம் B.A., B.L., அவர்களும், கனம். திரு. கக்கன் அவர்களும், சென்னைமாநில அறநிலைய ஆணையர் உயர் திரு. A. உத்தண்டராமப் பிள்ளை B.A., B.L., I.A.S. அவர்களும் உடனே திருவரங்கம் சென்று பார்வையிட்டு மகாசம்ப்ரோக்ஷணத் திருப்பணியைத் தொடங்கிவைத்தது குறிப்பிடத்தக்கது.

திருவரங்கச் சிறப்பு :

இது தருமபுர ஆதீனத்துத் திருச்சிராப்பள்ளி மலைக் கோட்டை மவுன மடத்துச் செயலாளர் வித்துவான் குப்புசாமி ஐயங்காரால் பரிசோதிக்கப்பட்ட ஸ்ரீரங்க மாஹாத்மியம் என்ற 25–4–1908 இல் வெளியிட்ட நூலில் உள்ளவாறு எழுதிய குறிப்பு. இம்மான்மியம் பிரமாண்ட புராணத்தின் நடுவில் உள்ள பதிணேன்ருவது அத்தியாயம் என்பர். இதுவும் அத்தனை அத்தியாயம் உடையதே.

" திருமால் நான்முகனுக்குச் சொல்லியது :- மலரோனே இத்திருவரங்க விமானத்தில் நீ என்னை அருச்சித்துள்ளாய். இனி இரகுவமிசத்தாரது அயோத்தியில் எழுந்தருள விரும்பு கின்றேன் " (அத். 7. சு. 61) " அங்கு நாலு சதுர்யுகம் வரை அருச்சிப்பர். பின்பு சோழர் ஆளும் காவிரிக்கரையில் எழுந் தருளித் திங்கட் குளக்கரையில் திருக்கண் வளர்வேன் " (62) " அங்கே ஏழுமநுவந்தரம் வரையில் இருந்து மாலையில் உம் அருகில் உறுவேன். அக்கால் என்னை அருச்சிப்பாய் " (63) " இவ்விமானத்தில் இவ்விக்கிரத்தோடும் கதாகதம் (போக்கு வரவு) புரிவேன். இது நினக்கு விருப்பாகுக " (64) இவ்

விமானத்தை இட்சுவாகு வேந்தர்க்குக் கொடு. இரவில் இவ் விமானம் வந்து உன்னையே சேரும். (72) 'நான்முகன், அவ் வேந்தரிடம் கொடுக்கக் கருடன்மேல், விமானத்தை ஏற்றித் தானும் அன்னம் ஊர்ந்து சென்று, அவ்வேந்தர் தவம்புரியும் காட்டை உற்றான்.'' (74) பிரணவ சொரூபம் உடைய அத் திருவரங்கப் பெருவிமானத்தை இட்சுவாகு பெற்றார். (75) 'அவர் அதனை அயோத்தியில் நிறுவிப் பல்லாற்றாலும் வசிட்ட முனிவர் சொற்படி வழிபட்டார்.' அவர் மரபினரும் நாலு சதுர் யுகம் திருவரங்கநாதனை வழிபட்டனர்.' 'தசரதர் அசுவமேத யாகம் புரிந்தபோது சென்ற பூவேந்தருள் ஒருவனான சோழன் தருமவருமன், இட்சுவாகு போலத் தவம்புரிந்து, முனிவர்கள் சொன்ன வாய்மையில், தவத்தின் நீங்கித் தன்நகரை உற்றான். அது காவிரியின் தென் கரையில் உள்ள நிசுளாபுரியாம்.

'நான் இராமனாகி இராவணனைக் கொன்றபின்பு, விபீடணர் பொருட்டு உன் திருவரங்க விமானத்தைக் காவிரிக் கரையில் திங்கட் குளக்கரையில் பாம்பணையில் விரைவில் நீங்கள் வணங்குவீர்கள்.' (அத். 8. சுலோ. 31) என்று அம்முனிவர் கட்குப் பெருமாள் சொல்லினார்.

'கதிரோனே உன் 'வழியினர் அயோத்தியிலும் பிறரொடு திருக் காவிரிக்கரையிலும் என்னை வழிபடுவர். (36) கதிரோன் கூற்று :- 'தருமவருமனுக்காக விரைவில் திருவரங்கநாதன் காவிரிக்கரையில் எழுந்தருள்வான். முனிவர் கூற்று :- விபீடணர் திருவரங்க விமானத்தை எழுந்தருளச் செய்து கொண்டு இங்கு வருவார். இது மெய்.' (43) 'தருமவருமன், இராமனால் அயோத்தியைச் சார்ந்து, வேள்வி முடித்தபின், பரிசு பெற்று மீண்டு நிசுளாபுரி உற்றான்.' (48-50)

''இராமன் விபீடணருக்கு மிகவுயர்ந்த பரிசு தரவேண்டி, எல்லாத்துணைப் பொருள்களுடனும் சிற்பிகள் அந்தணர் களுடனும் திருவரங்கநாதனை அளித்தான். அவ்விபீடணருக்கு வேனிற்காலம் பங்குனித்திங்கள் சனிக்கிழமை விடியலில் உரோகிணி பத்திரை கூடிய நல்வேளையில், இராமன் திருவரங்க விமானத்தை அளித்தான். பரிவாரங்களுடனும் அந்தணர் களுடனும்.'' (52-53) விபீடணர் நல்வேளையில் நிறுவியதே இத் திருவரங்கம். அதை அந்தணரும் தருமவருமனும் விபீடணரும் வழிபட்டனர்.

செய்திகள்

ஆதீன தேவஸ்தானங்களில் :

பங்குனித்திங்கட் பெருவிழா

தருமபுர ஆதீனத்திற்குச் சொந்தமான, வேளூர் ஸ்ரீ வைத்திய நாதசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தியநாதசுவாமிக்கும், திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ அறம் வளர்த்தநாயகி சமேத ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமிக்கும், பேரளம் ஸ்ரீ சுயம்புநாதசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ பவானியம்பாள் சமேத ஸ்ரீ சுயம்புநாத சுவாமிக்கும் பங்குனித் திங்கட் பெருவிழா விளம்பி ஆண்டு பங்குனித்திங்கள் 2ஆம் நாள் (15—3—59) தொடங்கி மிக்க சிறப்போடு நடைபெற்றது. விழாநாட்களில் சமயச்சொற்பொழிவு களும், இன்னிசைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

வேளூரில் 19—3—59 வியாழக்கிழமையன்றும் திரு புவனத்தில் 20—3—59 வெள்ளிக்கிழமையன்றும் திருமுறை விழாவும் தேவார வகுப்பு ஆண்டு விழாவும், மிக்க சிறப்போடு நடைபெற்றன. திருமுறைகள் யானைமீது அலங்காரம் செய்யப் பெற்று இன்னிசைவாணர்கள் திருமுறைப் பாராயணத்தோடு வீதிவலமாகக் கொணரப்பெற்றன. தேவார வகுப்பு மாணவர் களுக்குப் பரிசுகள் வழங்கப்பெற்றன.

சென்னை சமயப் பிரசார நிலையத்தில் :

மகா சிவராத்திரி விழா

சென்னை, தியாகராயநகரிலுள்ள தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப்பிரசார நிலையத்தில் 7—3—1959 இரவு 7 மணிக்கு மகா சிவராத்திரி விழா கொண்டாடப்பெற்றது. சர்தார் திரு. அ. வேதரத்தினம் பிள்ளை, எம். எல். ஏ. அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசியதன் சுருக்கம்.

நம் நாட்டில் கொண்டாடப்பெறும் ஒவ்வொரு விழாவும் தத்துவக் கருத்து நிறைந்தது. விஞ்ஞான ரீதியாகவும் மக்கள் வாழ்க்கைக்கு நலன் அளிப்பது - மகா சிவராத்திரி விழாவில் உபவாசமும், வழிபாடும், உறங்காமையும் மேற்கொள்ளப்படு கின்றன. மருந்துகளால் தீராத நோய்கள் உபவாசத்தால் நீங்கு

கின்றன. உணவுக்கட்டுப்பாட்டினுல் பிரமசரியம் காக்கப்படுகிறது. மனிதன் மனிதனுக வாழ உபவாசம் பெரிதும் பயன்படுகிறது. பிற முயற்சிகளால் சாதிக்கமுடியாத காரியங்களே உபவாசத்தால் சாதிக்க இயலும் என்பதனைக் காந்தியடிகள் வாழ்க்கையால் நன்கு உணரலாம். உதாரணமாக, பீகார் மாகாணத்தில் நடைபெற்ற படுகோலே காந்தியடிகளின் உபவாசத்தால் நின்றது. மேலும், காந்தியடிகளின் ஆறு நாள் உபவாசத்தினுல் என்றும் தமது கோள்கையை மாற்றிக்கோள்ளாத பிரிட்டிஷ் கேபினேட் தமது கோள்கையினே மாற்றிக் கோண்டது.

கார்த்திகை மாதப் பௌர்ணமியில் தீபவிழாக் கோண்டாடுவது தமிழ் நாட்டு வழக்கமாயுள்ளது அக்காலம், உணவுப் பயிர்களே அழிக்கக்கூடிய டேம்பேல்ட்டர் என்ற ஒருவகைப் பூச்சி முட்டையிடும் காலமாகும். அக்காலத்தில் தீபங்களே நிறைய ஏற்றிவைத்து வழிபாடாற்றுவதால் தீப ஒளியாலும் அதன் புகையாலும் அப்பூச்சிகளின் முட்டைகள் பூச்சிகளாகாமல் மடிகின்றன. அங்ஙனம் மடிவதால் உணவுதான்யப் பயிர்கள் நன்ருகச் சேழித்து வளர்கின்றன. விவசாயத்தில் சிறப்புற்று விளங்கும் ஜப்பானியர் ஒவ்வோராண்டும் கார்த்திகை மாதப் பௌர்ணமியில் வயல்களிலேல்லாம் விளக்கேற்றி வைத்துக் கோண்டாடுவதால் இது நன்கு விளக்கமாகிறது. இம்மாதிரி விஞ்ஞானத்திற்கும் ஒத்துள்ள பல விழாக்களே நமது முன்ஞேர்கள் ஏற்படுத்தியுள்ளனர் இவ்விழாக்களே நமக்கு நினேவூட்டும் வகையில் இங்நிலேயத்தார் தோடர்ந்து விழாக்களே நடத்திவருவது கண்டு மகிழ்ச்சியடைகிறேன்.

மேலும், தருமபுர ஆதீனம் பல நல்ல காரியங்களேச் சிறப்பாகச் சேய்துவருகிறது: தமிழ் நாட்டின் தலேநகரில் இந் நிலேயம் அமைத்துப் பணிபுரிய முன்வந்தது பாராட்டற்குரியது. தமிழகத்தில் மட்டும் இம்மாதிரி நிலேயம் அமைந்திருத்தல் போதாது. இதுபோல் பிறமோழி பயிலும் பல இடங்களிலும் பல கிளேகள் அமைத்துப் பணியாற்றுதல் வேண்டும். இவ்வாதீனச் சீடர்களுள் சிறந்தவரான குமரகுருபர சுவாமிகள் வடநாடு சேன்று காசியில் மடம் கண்டார்கள். சைவ சித்தாந்தப் பிரசாரம் 300 ஆண்டுகட்கு முன்னரே சேய்தார்கள். அதன் பயனுக எழுந்த நல்லன பலவற்றுள் துளசிதாசர் இராமாயணமும் ஒன்று. அதுபோல பல நன்மைகள் நாட்டிலே தோன்ற

இம்மாதிரியான ஸ்தாபனங்கள் நாடு முழுவதும் தோற்றுவிக்கப் படவேண்டும்.

" மகா சிவராத்திரி மகிமை " பற்றிப் பேசிய கயப்பாக்கம் திரு. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள், நமது உடம்பில் உள்ள முப்பத்து மூன்று எலும்புகளும் முப்பத்து முக்கோடி தேவர்களை யுணர்த்துகின்றன. வயிற்றில் உள்ள 36 அடி நீளமுள்ள குடல் 36 தத்துவங்களை நினைவூட்டுகின்றன. ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு நாளும் 21,600 மூச்சு விடு கின்றனர். இம்மூச்சுக் காற்றைக் கணக்கிட்டு அடக்கும் ஆற்றல் உடையோர் நீண்ட நாள் வாழ்வர் என உரைத்தார்கள்.

" இறை வழிபாடு " பற்றிப் பேசிய திருமதி. சரஸ்வதி பாண்டுரங்கம், எம். எல். ஸி. அவர்கள், கற்பு என்பது இந்த நாட்டின் சிறந்த சோத்து. இதனுல் எந்த நல்ல காரியங்களையும் சாதிக்க முடியும். இதற்குக் கண்ணகி போன்ற பலருடைய வரலாறுகளையும் அனுபவங்களையும் சான்று காட்ட முடியும். பெண்கள் தெய்வ வழிபாடாற்றுவதுடன் கணவனை வழிபடுவது மிகவும் அவசியம். இம்முறையைக் கையாள்வதால் பல நலன் களை நான் பெற்றிருக்கிறேன். நமது நாட்டில் பெண்களும் நல்ல பணி புரியக் கன்னிமாடங்கள் தேவை. பிற மதத்தவர் கன்னிமாடங்கள் அமைத்துப் பெண்கள் சேவை செய்ய வாய்ப் பளித்து அவர்களது மதத்தைப் பரவச் செய்கின்றனர். நமது இந்து மதத்தினர் இம்முயற்சியில் ஈடுபட்டு நமது சமயத்தை வளர்க்க வேண்டும் என்று கூறினுர்கள்.

நிலையத் திருமுறை வகுப்பில் பழைய மாணவி செல்வி, எஸ். சாரதாதேவியின் குழுவினர் " திருஞானசம்பந்தர் " கதா காலட்சேபம் நிகழ்த்தினுர்கள்.

தொடக்கத்திலும் நிறைவிலும் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும், நன்றியுரையும் கூற கடவுள் வாழ்த்துடன் விழா இனிது நிறைவேறியது.

கந்தபுராண விரிவுரை நிறைவுவிழா,
திருவிளையாடற் புராண விரிவுரைத் துவக்கவிழா.

சென்னை தியாகராயநகரிலுள்ள தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தில் இரண்டாண்டுகளாக ஆதீனப் புலவர் காஞ்சீபுரம், திரு. க. வச்சிரவேல் முதலியார்

அவர்களைக்கொண்டு நடத்தப்பெற்றுவந்த கந்தபுராண விரிவுரை நிறைவு விழாவும், திருவிளையாடற் புராணத் தொடக்க விழாவும் 15—3—59 மாலை ஷை நிலையத்தில் கொண்டாடப்பெற்றது. விழாவிற்கு, அறநிலைய அமைச்சர். "நல்லறங்காவலர்" கனம். திரு. எம். பக்தவத்சலம் B.A., B.L., அவர்கள் தலைமை வகித்து அமைச்சர் தமது தலைமை உரையில் பல சிறந்த கருத்துக்களை எடுத்துக் கூறினார்கள்.

பிறகு, விரிவுரையாளர், திரு. க. வச்சிரவேல் முதலியார் அவர்களுக்கு ஆதீனத்தின் சார்பாக அமைச்சர் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார்கள். புலவர்களைப் போற்றல் அவசியம். அதனை ஆதீனம் நல்ல முறையில் செய்துவருவது மகிழ்ச்சிக் குரியது என்றும் குறிப்பிட்டார்கள்.

திருவிளையாடற் புராண விரிவுரையைத் துவக்கிவைத்த சென்னை, உயர்மன்ற நீதிபதி திரு. வி. சுப்பிரமணியம் அவர்கள் சமீபத்தில் தருமை ஆதீனத்திற்குச் சென்றபோது மகா சந்நிதானத்தைத் தரிசித்தேன். மகாசந்நிதானத்தின் சாந்தமான முகத்தைக் கண்டும் நல்லுரையைக்கேட்டும் பணிகளைக்கண்டும் மகிழ்ந்தேன். அவர்கள் பல நல்ல காரியங்களை பல இடங் களிலும் செய்துவருகிறார்கள். இங்கு சென்னையில் இந்நிலைய வாயிலாக நல்ல முறையில் சைவசமயப் பிரசாரம் செய்துவரு கிறார்கள். என்னைப் போன்றவர்கள் இம்மாதிரி தொண்டில் கலந்து கொள்ளவேண்டுமென்று அழைக்கிறார்கள். இதுபோன்ற விழாக்களில் கலந்து கொண்டு நல்லவற்றைச் சொல்வது என்னையும் அமைச்சர் அவர்களையும் போன்றவர்களின் கடமை யும் தொண்டுமாகும். பதவி காரணமாக எம்போன்றவர்களை அழைக்கிறார்கள். நாங்கள் சொன்னால் மக்களுக்கு ஒருவகையில் நம்பிக்கை உண்டாகும் என்று கருதுகிறார்கள். நான் ஒரு நீதிபதி. நான் சொல்கிறேன். நம்பிக்கைகொண்டு இறைவனைக் கும்பிட்டால் எல்லா நலன்களும் கிடைக்கும். நீதிபதியாதலால் பாரபட்சமில்லாமல் உறுதியாய்ச் சொல்கிறேன். கிருத்தவ மதத்தில் ஒரு கதை உண்டு. அவர்கள் எதனையும் நம்பிச் செய்ய வேண்டும் என்பர். ஒரு நாள் பிரசங்கியார், மலையை அப்புறம் போ என்று நம்பிக்கையுடன் சொன்னால் போய்விடும் என்று சொன்னார். அதைக்கேட்ட பெண் ஒருத்தி தன் வீட்டில் சன்னலை மறைத்திருந்த மலையை அப்புறம் போ என்று

சொன்னாள். அடுத்தநாள் அது போகாமல் அதே இடத்தில் இருந்தது. இது போகாது என்று நேற்றே எனக்குத் தெரியுமே என்றாள். இதனால் அவள் முன்னால் சொன்னபோதே நம்பிக்கை யில்லாது சொன்னாள் என்று தெரிகிறது. அதுபோல் நம்பிக்கை யில்லாமல் புராணங்களைப் படிப்பதும் பலனைத்தராது. புராணம் படிக்கிறவர்கள் அதனால் வரும் பலனைத் தெரிந்துகொண்டால் படிக்க அக்கரை பிறக்கும். எனவே பலன்தரும் அப்பாடலை மட்டும் சொல்லித் திருவிளையாடற் புராண விரிவுரையைத் தொடங்கிவைக்கிறேன்.

" திங்களணி திருவாலவாய் " இதில் சங்கநிதி பதுமநிதிச் செல்வ மெல்லாம் பெறலாம் என்கிறார், இப்புராண ஆசிரியர் பரஞ்சோதி முனிவர். அப்பர் சுவாமிகள் இவையெல்லாம் தமக்கு வேண்டாம் என்கிறார். இதன் பொருள் தகுதியில்லாதவர் கொடுத்தால் வேண்டாம். இறைவனே கொடுத்தால் வேண்டும் என்பதுதான். சைவ சித்தாந்த நெறி உலகியலை வெறுப்ப தல்ல. அதில் இருந்தே பேரின்பத்தினைப் பெற முயற்சிப்பது தான் என்று கூறினார்கள்.

திரு. க. வச்சிரவேல் முதலியார் அவர்கள் வள்ளியம்மை திருமணம் பற்றி விரிவுரை நிகழ்த்திப் புராண நிறைவு செய்து பேசுகையில், முருகப்பெருமான் ஆரிய முறை தழுவிய தெய்வயானையார் திருமணத்தைத் தெற்கேயுள்ள திருப்பரங் குன்றத்திலும், தமிழ்முறை வள்ளியம்மையார் திருமணத்தை வடக்கேயுள்ள வள்ளிமலையிலும் கொண்டருளினார். இது எத் திசையில் உள்ளவர்களுக்கும் இன்பம் நல்குபவன் முருகன் என்பதை விளக்குவதாகும் என்று கூறினார்கள்.

ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் திருவிளையாடற் புராணத்தைத் தொடங்கி விரிவுரை நிகழ்த்தினார்கள்: அவர்கள் குறிப்பிட்டதாவது; " புராணம் என்பது பழமையானது என்று பொருள்படும். பழமையான பதி, பசு, பாசம் என்ற முப்பொருள் களின் வரலாற்றைக் கதையாகச் சுவைபடக்கூறுவதே புராணங்கள். இவற்றுள் பெரியபுராணம், திருவிளையாடற் புராணம், கந்தபுராணம் மூன்றும் சிவபெருமானின் மூன்று கண்கள் போன்றன. இறைவனுக்கே புராணன் என்று பெயர் உண்டென்பதைத் திருஞானசம்பந்தர் " அகனமர்ந்த அன்பின ராய் " என்ற திருவீழிமிழலைத் தேவாரத்தில் குறிப்பிட்

டுள்ளார்கள் என்று கூறி "சத்தியாய்ச் சிவமாகி" என்று தொடங்கும் விநாயக வணக்கப் பாடலுக்குப் பொருள் கூறினார்கள்.

தொடக்கத்தில், தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அனுப்பி அருளிய ஆசிச்செய்தியை ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வாசித்தார்கள். வடபழநி தேவஸ்தானத்தில் இருந்தும் காஞ்சி ஸ்ரீ காமகோடி பீடாதிபதி ஸ்ரீமத் சங்கராச் சாரிய சுவாமிகளிடமிருந்தும் வந்திருந்த பிரசாதங்கள் தலைவர் அவர்கட்கும் விரிவுரையாளர்கட்கும் வழங்கப்பட்டன.

பின்னர் திரு. பி. ஜி. கருத்திருமன் எம். எல். ஏ. அவர்கள் பாராட்டுரை நிகழ்த்துகையில் வாழ்வியல் கற்களைப் போன்றன. கற்களை சாந்து வைத்து இசைத்தால்தான் கட்டடமாகும். அதுபோல பக்தி என்னும் சாந்து வைத்து இணைத்தால்தான் வாழ்க்கை என்னும் கட்டடம் வளம்பெறும் என்று கூறினார்கள்.

அடுத்துப் பேசிய திரு. முருகவேள் அவர்கள் சிறந்த ஞானி களும் தங்கள் கருத்துக்களைக் கதையினால்தான் உயர்த்த முடிகிறது என்பதை மேனாட்டு ஆசிரியர்களும் ஒப்புக்கொள் கிறார்கள் என்னும் உண்மைகளை மேற்கோள் காட்டி விளக்கி னார்கள். பின்னர் திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை எம். எல். ஏ. அவர்கள் பேசுகையில், ஆதீனம் தமிழகத்தின் தலைநகராகிய சென்னையில் இப்பிரசார நிலையத்தை அமைத்து, இம்மாதிரி தொண்டாற்றுவது பாராட்டுக்குரியதென்றும் இதனை மக்கள் அதிகமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும் கூறினார்கள்.

கந்தபுராண வரலாற்றைச் சுருக்கமாக எழுதிய பிரசுரம் பொதுமக்கட்கு வழங்கப்பட்டது. ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும் நன்றியுரையும் கூறினார்கள்.

நிலையத் தொண்டர் திரு. கா. திருநாவுக்கரசு தேசிகர் இயற்றிய கந்தபுராண வரலாற்று கிளிக்கண்ணிப் பாடல்களைத் திருமுறை வகுப்பு மாணவியர்கள் இசையுடன் பாடினார்கள். தொடக்கத்திலும், நிறைவிலும் கடவுள் வணக்கமும் வாழ்த்தும் பாடினார்கள்.

எதிர்காலம்

ஜோதிஷார்ணவம், பிரமஸ்ரீ கே, முத்துஜோதிடர் அவர்கள்,
திருவிடைமருதூர்.

(விகாரிஆ சித்திரைமீ 1உ முதல் 31உ முடிய)
(14—4—59 முதல் 14—5—59 முடிய)

விளம்பிஆ பங்குனிமீ 31உ திங்கட்கிழமை உதயாதி 46 நாழி 33 விநாடிக்கு சூரியன் மேஷ ராசியில் பிரவேசம், அஜபிரவேச லக்கனம் மகரம், நவாம்ச லக்கனம் மீனம், வருஷாதிபதி ராஜாவான குருவானவர் லாபராசியில் மித்திர க்ஷேத்திரத்தில் அமைந்தபடியால், எங்கும் சுபிக்ஷமும், தன தான்யவிருத்தியும், ஆஸ்தீக விருத்தியும் சமஸ்தமான மங்கள மும், உண்டாகி சகல பிரஜைகளும் சுக சந்தோஷத்தை அடை வார்கள். எங்கும் அமைதியும், சாந்தியும், தன தான்யவிருத்தி யும், சுபிக்ஷமும், நிரந்தரமாய் உண்டாக கடவுள் அருள்புரிவா ராக, லோகாஸ்சமஸ்தாஸ்ஸுகினோபவந்து.

1. மேஷம். அசுவதி - பரணி - கார்த்திகை $\frac{1}{4}$

மேஷராசி 9 பாதங்களும் சுபத்தையும், லாபத்தையும் தந்து மேஷராசிக்காரர்களுக்கு தொழில் விருத்தி, வியாபார விருத்தி, மேல்பதவிகள், குடும்ப சுகம், வஸ்திராபரணச் சேர்க்கை, பந்துமித்திராளுடைய சேர்க்கை முதலிய சுப பலன் கள் நடைபெறும். ஆரோக்கியமுண்டாகும். வெள்ளி, சனி சுபமாகும்.

2. விருஷபம். கார்த்திகை $\frac{3}{4}$, ரோஹிணி - மிருகசீரிஷம் $\frac{1}{2}$

கார்த்திகை 2, 3, 4 பாதங்கள் வீண் அலைச்சல்களையும், அதிக விரயங்களையும், தொல்லைகளையும் உண்டுபண்ணும். ரோகிணி நான்கு பாதங்களும், வியாதி பீடைகளையும், நஷ்டத் தையும் தரும். மிருகசீரிஷம் 1, 2 பாதங்கள் மிசிரமாய் நடக்கும். வேலைகிடைக்கும் கூலிகிடைக்காது. சில்லரையான மனஸ்தாபங்களையும் கலகங்களையும் உண்டுபண்ணும். மனம் நிம்மதி இராது. எந்தக் காரியங்களும் விக்னமடையும். புதன், வியாழன் சுபமாகும்.

3. மிதுனம். மிருகசீரிஷம் $\frac{1}{2}$, திருவாதிரை - புனர்பூசம் $\frac{3}{4}$

மிருகசீரிஷம் 3, 4 பாதங்கள் தலயாத்திரை ஏற்படும். பேரியோர் அன்பும், நஷ்டமான போருள் வரத்தும், உத்யோக லாபமும் ஏற்படும். திருவாதிரை நான்கு பாதங்களும் ஆரோக்கியத்தைக் கோடுத்து குடும்ப சுகத்தையும் தரும். புனர்பூசம் முதல்பாதம் பெரியோர்கள் சாபத்தைத்தந்து துக்கத்தைத்தரும். புனர்பூசம் 2, 3 பாதங்கள் சுப சந்தோஷங்களையும், சத்ரு நாசத்தையும், குடும்ப சுகத்தையும் தரும். வெள்ளி, சனி சுபமாகும்.

4. கடகம். புனர்பூசம் $\frac{1}{4}$, பூசம் - ஆயில்யம்

கடகராசி ஒன்பது பாதங்களும் என்றும் கண்டிராத சந்தோஷங்களைக் கோடுக்கும். உயர்பதவிகளைத் தரும். ஸ்தாவர ஜங்கம சோத்துக்கள் சேரும். நூதன வஸ்திர, ஆபரண, வாகன லாபங்கள் உண்டாகும். எங்கும் கீர்த்தி ஏற்படும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

5. சிம்மம். மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$

மகம் நான்கு பாதங்களும் இடம் மாறச்செய்து உத்யோக லாபத்தைத் தரும். பேரியோர் அன்பு கிடைக்கும். பூரம் நான்கு பாதங்சளும் தோழில் லாபத்தையும், அதிகமான ஆசைகளையும் தந்து குடும்ப சுகத்தைத் தரும். உத்திரம் முதல்பாதம் அதிக சேலவுகளையும், கடனையும், வியாதியையும் உண்டு பண்ணும். சனி, சேவ்வாய் சுபமாகும்.

6. கன்னி. உத்திரம் $\frac{3}{4}$, ஹஸ்தம் - சித்திரை $\frac{1}{2}$

உத்திரம் 2, 3, 4 பாதங்கள் தேய்வபலத்தால் எதிர்பாராத உத்யோக லாபத்தையும், மேலோர், பேரியோர்களின் அன்பையும் உண்டுபண்ணும். ஹஸ்தம் முதல் பாதம் ஆரோக்யத்தைத் தரும். பேரியோர் அன்பினல் சகல காரியங்களையும் சாதிக்கச் சேய்யும். ஹஸ்தம் 2, 3 பாதங்கள் குடும்ப சுகத்தையும், சுபசோபனுதிகளையும், லாபத்தையும் கோடுக்கும். ஹஸ்தம் நாலாம்பாதம் அடிக்கடி சஞ்சார பலன்களையும், தேய்வீக தோண்டுகளையும், தானதர்ம புண்ணிய பலன்களையும், ராஜாங்கத்தால் நன்மதிப்பையும் உண்டுபண்ணும். வெள்ளிக்கிழமைகளில் தேய்வீக தோற்றம் உண்டாகும். சித்திரை 1, 2 பாதங்கள்

குடும்ப சுகத்தைத்தரும். புத்திராதிகளால் மேன்மை உண்டாகும். கடன் நீங்கும். சுபம் உண்டாகும். சனி, சேவ்வாய் சுபமாகும்.

7. துலாம். சித்திரை $\frac{1}{2}$, சுவாதி - விசாகம் $\frac{3}{4}$

சித்திரை 3, 4 பாதங்கள் மிஸ்ரமாய் நடக்கும். விசாகம் 1, 2, 3 பாதங்கள் குடும்ப சிரமத்தைத் தந்து மிகுந்த கவலையை உண்டுபண்ணும். சுவாதி 4 பாதங்களும் ஆரோக்கியத்தைத் தரும். வியாதி, கடன் நீங்கி சுபம் உண்டாகும். சிநேகிதர்கள் மூலமாயும், பெரியோர்களின் மூலமாயும் விரும்பிய பலன் கிடைக்கச்செய்யும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

8. விருச்சிகம். விசாகம் $\frac{1}{4}$, அனுஷம் - கேட்டை.

விருச்சிகம் நாலாம்பாதம் சந்தோஷத்தை உண்டுபண்ணும் ஆரோக்கியம் உண்டாகும். அனுஷம் நான்கு பாதங்களும் தூர சஞ்சாரங்களையும் மிகுந்த கஷ்ட பலனையும் தரும். கேட்டை நான்கு பாதங்களும் நிர்பந்தத்தில் அகப்பட்டுக் கொண்டு மனோவேதனையை உண்டுபண்ணும். குடும்பத்தில் நஷ்டத்தையும், கவலையையும், காட்டும். தெய்வ பலம் இருந்து காப்பாற்றும். புதன், வியாழன் சுபமாகும்.

9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

மூல நக்ஷத்திரம் நான்கு பாதங்களும் கஷ்டங்களிலிருந்து விடுபட்டு சுபத்தைத் தரும். பூராடம் நான்கு பாதங்களும் தெய்வபலத்தோடு பிரகாசிக்கும், சகல இடையூறுகளும் நீங்கும். உத்திராடம் முதல் பாதம் ஆரோக்கியத்தைத் தந்து, குடும்ப சுகத்தையும் தரும். நண்பர்களின் உதவியால் கடன் நீங்கும். நல்ல மதிப்பு உண்டாகும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

10. மகரம். உத்திராடம் $\frac{3}{4}$, திருவோணம் - அவிட்டம் $\frac{1}{2}$

உத்திராடம் 4 பாதங்களும் அதிக உழைப்பின்பேரில் லாபம் உண்டுபண்ணும், இடம்மாறும். திருவோணம் 1, 2 பாதங்கள் நன்மையிராது. குடும்பத்தொல்லைகள் அதிகமாகும். திருவோணம் 3, 4 பாதங்கள் ஆரோக்கியத்தைத் தரும். உத்யோக லாபம் உண்டாகும். மேல்பதவி கிட்டும். இல்லறம் ஓங்கும். அவிட்டம் 1, 2 பாதங்கள் பெரிய பதவிகளைத்தந்து,

அதிகமான போருப்பைப் உண்டுபண்ணும். நூதன வஸ்திர வாகனுதி லாபங்களேயும் தரும். புதன், வியாழன் சுபமாகும்.

11. கும்பம். அவிட்டம் ½, சதயம் - பூரட்டாதி ¾

அவிட்டம் 3, 4 பாதங்கள் சுபமாகும். நூதன வஸ்திராபரணம் சேரும். சதயம் நான்கு பாதங்களும் மேல்பதவியிலிருந்து கீழ் பதவியைத் தரும். விரோதங்களேயும், கலகங்களேயும் உண்டுபண்ணும். பூரட்டாதி 1, 2, 3 பாதங்கள் ஆரோக்கியத்தையும் இல்லற சுகத்தையும் சந்தோஷத்தையும் உண்டுபண்ணும். குடும்பம் ஓங்கும். வெள்ளி, சனி சுபமாகும்.

12. மீனம். பூரட்டாதி ¼, உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி ஒன்பது பாதங்களும் சுபத்தையே தரும். ஆரோக்கியம் ஏற்படும். உத்யோகத்தில் உயர்பதவிகளும் லாபமும் உண்டாகும். ருணரோக சத்துருபாதைகள் விலகும். தெய்வபலம் பிரகாசிக்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

குறிப்பு :- மேற்படி மாதத்தில் கோடை மழை கண்டம், கண்டமாய் ஏற்படும். அமைதி குறையும். உணவுப்போருள்கள் தட்டு ஏற்படும். சகல சாமான்களும் விலே ஒருமுகமாக இருக்கும். ஏழை மக்களும். நடுத்திர வகுப்பாரும் ரோம்ப சிரமப்படுவார்கள். கடவுள் கருணே ஏற்பட்டு உலகம் சுபிக்ஷமாயும், அமைதியாகவும் இருக்கப் பிரார்த்திப்போமாக.

ஸ்ரீ வைத்தியநாத சுவாமிக்கு சுவர்ண நாகாபரணம்

வைத்தீஸ்வரன்கோவில் ஸ்ரீ வைத்தியநாத சுவாமிக்கு தருமை ஆதீனகர்த்தர் பெரும் முயற்சியினுல் ரூ. 40,000 மதிப்புள்ள விலே உயர்ந்த கற்களால் போறிக்கப்பட்ட விசேஷ வேலேப்பாடுகளுடன் கூடிய தங்க நாகாபரணம் பிரும்மோற்சவ ஆரம்ப தினத்தன்று சார்த்தப்பேற்றது.

— சுதேசமித்திரன், 20—3—59.

சென்னை, தருமபுர ஆதீன மடாலய் தேவாலய சமயப் பிரசார நிலையத்தில்
(வேளூர் தேவஸ்தான இறைபணி மன்றம்)
கந்தபுராண விரிவுரை நிறைவு விழா



சென்னை மாநில அறநிலைய அமைச்சர், "நல்லறங்காவலர்"
கனம். திரு. M. பக்தவத்சலம், B.A., B.L., அவர்கள்

கந்தபுராணம் விரிவுரையாளர், தருமையாதீனப் புலவர்,
திரு. க. வச்சிரவேல் முதலியார், B. A., L. T., அவர்கட்குப்
பொன்னாடை போர்த்துதல்,

உ
சிவமயம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான

திருக்குறுக்கை

ஸ்ரீ வீரட்டேசுவரசுவாமி தேவஸ்தானம்

ஸ்ரீ ஞானம்பிகா சமேத ஸ்ரீ யோகீசுவரசுவாமிக்கு

விநாயகர் முதலிய பரிவாரங்களுடன்

ஜீரணோத்தாரண

அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேகம்

26—4—59 ஞாயிற்றுக்கிழமை

யாக ஆரம்பம்
வேத சிவாகம பாராயண ஆரம்பம்
திருமுறைப் பாராயண ஆரம்பம்
சைவசித்தாந்தச் சொற்பொழிவுகள்

29—4—59 புதன்கிழமை

காலை : 6-50 மணிக்குமேல் 7-30 மணிக்குள் மஹாகும்பாபிஷேகம்
,, 8-30 மணி முதல் மஹாபிஷேகம்
,, 9-30 மணி முதல் லக்ஷார்ச்சனை ஆரம்பம்
இரவு: திருவீதியுலாக் காட்சி

சிவநேசச் செல்வர்கள் அனைவரும் வந்து தரிசித்துத்
தரிசனானந்தப் பெரும்பேறெய்தியுய்க.

Printed & Published by K. Sundaresa Iyer, Agent Dharmapuram Adhinam at the Gnanasambandam Press, Dharmapuram. (Mayuram). 10—4—59.